தொழில்நுட்ப நிறுவகம்

மொறட்டுவைப் பல்கலைக்கழகம்

ஆண்டறிக்கை

2023

நிறுவகத்தின் முகாமைச் சபையினால் 2024.03.14 ஆம் திகதி நடாத்தப்பட்ட அதன் 261 ஆவது கூட்டமர்வின் போது இந்த அறிக்கை அனுமதிக்கப்பட்டது.

பொருளடக்கம்

			பக்க இல.
01	பணிப்பாளரின் மீளாய்வு		02
	தொலைநோக்கு		04
	பணித்திட்டம்		04
	இலக்கு மற்றும் நோக்கங்கள்		05
02	மொறட்டுவைப் பல்கலைக்கழக தொழில்நுட்ப நிறுவகத்திற்கான எதிர்கால திட்ட மதிப்பீட்டறிக்கை		10
03	தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா பாடநெறி மற்றும் மொறட்டுவைப் பல்கலைக்கழக தொழில்நுட்ப நிறுவகம் நிறுவப்பட்ட வரலாறு பற்றிய ஒரு சுருக்கமான அறிமுகம்		13
04	நிறுவனக் கட்டமைப்பு - 2023		16
05	முகாமைத்துவ சபை உறுப்பினர்கள்		17
06	தொடர்புகொள்வதற்கான தகவல்கள்		18
07	பணியாட்குழுவும் மாணவர்களும் பற்றிய விபரங்கள்		19
	7.1	மாணவர்கள் பற்றிய விபரங்கள்	21
	7.2	கல்விசார் மற்றும் கல்விசாரா பணியாட்குழு பற்றிய விபரங்கள்	22
08	ஆராய்ச்சிகளும் புத்தாக்கங்களும் வெளியீடுகளும் பற்றிய விபரங்கள்		23
09	நிகழ்ச்சித்திட்டங்களும் கருத்தரங்குகளும் செயலமர்வுகளும் பற்றிய விபரங்கள்		29
10	மாணாக்கர் மற்றும் பணியாட்குழுவினரின் செயற்பாடுகள்		31
11	மீண்டெழும் செலவினம் பற்றிய விபரங்கள்		32
12	மூலதனச் செலவினம் பற்றிய விபரங்கள்		32
13	நிதிசார் முன்னேற்றம் பற்றிய விபரங்கள் (செலவுகள்)		32
14	நிதிசார் முன்னேற்றம் பற்றிய விபரங்கள் (பிறப்பிக்கப்பட்ட வருமானம்)		33
15	நிதிசார் செயலாற்றுகைப் பகுப்பாய்வு - 2023		33
16	பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை அமுல்படுத்துதல் பற்றிய அறிக்கை		34
17	கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்கள		41
18	கணக்காய்வு குழு அறிக்கை		45
19	தேசிய கணக்காய்வு அலுவலகம		50
20	கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கைக்கானபதில		57

பணிப்பாளரின் மீளாய்வு

2023 ஆம் ஆண்டை நோக்கி மீண்டும்

2023 சனவரி மாதம் முதல் திசெம்பர் மாதம் வரையான காலத்திற்குரிய மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப நிறுவகத்தின் ஆண்டறிக்கையை வெளியிடக் கிடைத்ததையிட்டு நான் பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

மொறட்டுவைப் பல்கலைக்கழக தொழில்நுட்ப நிறுவகம் சிவில், இரசாயன, பொலிமர் (பல்படி), புடவை, பொறிமுறை, மின், இலத்திரனியல், கடல்சார், கப்பல்துறை, தகவல் தொழில்நுட்பம் போன்ற பலவின பத்து பொறியியல் பாடங்களை உள்ளடக்கிய, தொழில்நுட்பக் கல்வித்துறைகளில் கல்வி மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை வழங்குகிறது. இலங்கையை தொழில்நுட்ப ரீதியாக தலைசிறந்த ஒரு நாடாக மிளிர வைக்கும் தேசிய பொறுப்பை சிரமேற்கொண்டு இலங்கைக்கு அறிவை ஆதாரமாகக் கொண்ட உலக பொருளாதாரமொன்றை அடைந்துகொள்வதற்கு இயலுமை பெறுவதே எமது நோக்கமாகும். இதனை முன்னிட்டு மொறட்டுவைப் பல்கலைக்கழகத்துடனும் UGC உடனும் இணைந்து ITUM இனால் வெளியிடப்பட்ட தகைமைகளின் தேர்வுமுறைகளுக்கு அமைவாக, தகைமைபெற்ற அபேட்சகர்களுக்கு தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டத்தை ITUM முன்னெடுக்கிறது.

பொருளாதார நெருக்கடியின் விளைவாக கல்விசார் முன்னேற்றமும் நிருவாக நடவடிக்கைகளின் வீழ்ச்சியும் காரணமாக 2023 ஆம் ஆண்டு ஏனைய கணிசமான கல்வி நிறுவனங்களுக்கு போன்றே, மொறட்டுவைப் பல்கலைக்கழக தொழில்நுட்ப நிறுவகத்திற்கும் பலவினமான பெறுபேறுகளைக் கொண்டுவந்த ஓர் ஆண்டாகும். இருப்பினும், உரிய காலப்பணிச்சட்டத்திற்கு இணங்க அனைத்து முறைசார் கல்வி நிகழ்ச்சித்திட்டங்களையும் பரீட்சைகளையும் நடாத்துவதற்கு தொழில்நுட்ப நிறுவகம் (ITUM) இயலுமை பெற்றது. நடாத்தப்பட்ட அனைத்து பரீட்சைகளின் பெறுபேறுகளும் வெற்றிகரமாக வெளியிடப்பட்டன. பல்வேறு கல்வி, சமூக, கலாசார மற்றும் விளையாட்டு நடவடிக்கைகளையும் மேற்கொள்ளக்கூடியதாக இருந்ததுடன், ஏற்பட்ட அனைத்துப் பின்னடைவுகளும் உள்ளடங்குமாறு பரந்ததொரு வீச்சில் எம்மால் செயலாற்றக்கூடியதாக இருந்தது.

2023 ஆம் ஆண்டில் இடம்பெற்ற முக்கிய நிகழ்வுகளில் ஒன்றாக ITUM இன்று மற்றுமொரு மைல்கல்லாக அமைந்த ITUM சருவதேச ஆராய்ச்சிக் கருத்தரங்கு இந்திய முகாமைத்துவ விஞ்ஞான நிறுவகத்தின் (IIMS) ஒத்துழைப்புடன் ஒழுங்குசெய்யப்பட்டது. ஐக்கிய அமெரிக்கா, நியுஸிலாந்து, இந்தியா, பங்களாதேஷ், சீனா ஆகிய நாடுகளைச் சேர்ந்த ஐம்பதுக்கு மேற்பட்ட கல்விமான்களின் பங்கேற்புடன் நடைபெற்ற இக்கருத்தரங்கில் முப்பத்தெட்டு(38) ஆராய்ச்சித்தாள்கள் உள்ளிட்ட அறுபத்து நான்கு(64) ஆக்கங்கள் சமர்ப்பிக்கப்பட்டன. அழைக்கப்பட்ட ஆராய்ச்சித்தாள்களின் அமர்வின் முத்தாய்ப்பில் நடைபெற்ற அறிவோர் ஒன்றுகூடல்களின் மூலம் உலகளாவிய உள்ளடக்கத்தில் 5% அளவான கைத்தொழில்கள் சம்பந்தமான குறிப்பிடத்தக்க பிரச்சினைகள் பற்றி கவனம் செலுத்தப்பட்டது.

எவ்வாறாயினும், நிதி நெருக்கடி காரணமாக வெற்றிடமாகியிருந்த பதவிகளை நிரப்புவதற்கு நிதி ஒதுக்கீடுகளும் காணப்படாத ஒரு பின்னணியில், கல்வி மற்றும் ஏனைய பணியாட்குழு அங்கத்தவர்கள் நிதி நெருக்கடிக்கு மத்தியிலும் பல்கலைக்கழக முறைமையை விட்டு விலகியதன் காரணமாக கோடிட்டுக் காட்டத்தக்க பின்னடைவொன்று ஏற்பட்டது. இந்நிலைமை தற்போதுள்ள பணியாட்குழுவுக்கு சுமக்க முடியாத ஒரு சுமையை ஏற்படுத்தியது. அதன் விளைவாக, கற்கை நிகழ்ச்சித்திட்டத்தின் தரத்தைப் பேணுவதில் சிரமங்களை எதிர்நோக்க நேரிட்டது.

மேலும், கல்வி அமைச்சு எதிர்நோக்கியிருக்கும் நிதிப் பிரச்சினைகள் காரணமாக ஒதுக்கிய தொகைகளையும் உரிய நேரத்தில் விடுவிக்கப்படவில்லை. இதன் காரணமாக நிறுவகம் அதன் நிதி நடவடிக்கைகளை முகாமைசெய்து கொள்ளும்போது சிரமங்களை எதிர்நோக்கியது. எவ்வாறாயினும், நிலைமையை முகாமை செய்துகொள்வதற்கு சுய நிதிச் செயற்பாடுகளின் ஊடாக நியாயமான தொகை பணத்தை உருவாக்கிக்கொள்ள ITUM இயலுமை பெற்றது.

சவாலாக அமைந்த இவ்வாண்டினுள் வழங்கிய பெரும் ஒத்துழைப்பிற்காக அனைத்து கல்விசார் பணியாட்குழு உறுப்பினர்களுக்கும், நிருவாக மற்றும் நிதிப் பணியாட்குழுவினருக்கும் எனது நன்றியறிதலை இவ்வேளை தெரிவித்துக் கொள்கின்றேன். இக்காலப்பகுதியினுள் அவர்கள் வழங்கிய ஒத்துழைப்பையும் அர்ப்பணிப்பையும் இட்டு கல்விசார் குழுவுக்கும் முகாமைத்துவக் குழுவுக்கும் மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தின் உப வேந்தருக்கும் எனது உளப்பூர்வமான கௌரவ நன்றி தெரிவிக்கின்றேன். நம் மீது நம்பிக்கை வைத்த எமது மாணவர்கள் அனைவருக்கும் அவர்களது தொடரான நம்பிக்கை மற்றும் சார்புநிலையை நான் வரவேற்க விரும்புகின்றேன்.

பணிப்பாளர்
மேஜர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) S K திருநாவுக்கரசு RSP VSV USP

தொலைநோக்கு

தொழில்நுட்பக் கல்வியில் அதிசிறந்த நிலையமொன்றாக மிளிர்தல்.

பணித்திட்டம்

பிராந்தியத்தில் அதிசிறந்த தொழில்நுட்ப நிறுவனமொன்றாக மாறி இலங்கையர் சமூகத்தின் கல்வி, பொருளாதார மற்றும் சமூக முன்னேற்றத்திற்கு முனைப்புடன் பங்களிப்புச்செய்தல்.

- ➢ சமூகத்திலும் கைத்தொழில் துறையின் தேவைகளை நிறைவேற்றுவதற்காக அணுகக்கூடிய, நெகிழ்வான, வினைத்திறனான தொழில்நுட்பக் கல்வியையும் திறன்களையும் பயிற்சியையும் வழங்குதல்.

- ➢ புத்தாக்க மற்றும் படைப்புத்திறனுக்கு அவசியமான ஒரு சூழலை வழங்குதல்.

- ➢ தொழில்சார் வாய்ப்புகளுக்கு கைத்தொழில் மற்றும் வியாபாரத் துறையுடனும் சமூகத்துடனும் முனைப்பான ஒத்துழைப்பொன்றை உருவாக்குதல்.

- ➢ சமூக, பொருளாதார மார்க்கங்களையும் வாய்ப்புகளையும் முன்னேற்றுதல்.

இலக்கு மற்றும் நோக்கங்கள்

	இலக்கு	நோக்கங்கள்
1	**பிராந்தியத்தில் உயர் மற்றும் பரிணமித்துவரும் தொழில்நுட்பக் கல்வியில் முன்னோடியாக விளங்கி, உலகளாவிய கேள்விக்கு ஏற்ற, நாட்டின் பேண்தகு அபிவிருத்திக்கு தகுதிபெற்ற, அர்ப்பணிப்புள்ள பல்நோக்கு தொழில்வாண்மையினரை வழங்குவதில் தலைமைத்துவம் ஏற்றல்.**	1.1 சமூகத்தின் இன்றைய மற்றும் வருங்காலத் தேவைகளையும் உலகளாவிய கேள்வியையும் நிறைவேற்றுவதற்காக கல்விப் பாடநெறிகளின் தரத்தை உறுதிப்படுத்துதல். 1.2 தலைமைத்துவப் பயிற்சி பெறுதல், தரம் மற்றும் கூறமைதியின் தரம் கைத்தொழிலின் தேவைகளுடன் ஒத்திசைவுறுவதை உறுதிப்படுத்துதல். 1.3 தற்போதைய கல்வி நிகழ்ச்சித்திட்டத்தின் தரத்தை உறுதிப்படுத்துவதற்கும் தொழில்நுட்பத்தின் எழுந்துவரும் போக்குகளை அடையாளம் காண்பதற்கும் அடிக்கடி மீளாய்வுகளை நடாத்துதல்.
2	**தொழில்நுட்பத் துறையின் முன்னோக்கிய நகர்வுக்காக ஆராய்ச்சி மத்தியநிலையமொன்றாக மிளிர்தல்.**	2.1 புது மாதிரியான ஆராய்ச்சிகளை ஊக்குவிப்பதற்காக பணியாட்குழுவுக்கும் மாணாக்கர்களுக்கும் இடையில் ஆராய்ச்சிக் கலாசாரமொன்றை முன்னேற்றுதலும் வளர்த்தலும். 2.2 கைத்தொழில் கேள்வி பற்றிய ஆராய்ச்சியை நடாத்துதல். 2.3 படைப்பாக்கத்திற்கும் புத்தாக்கத்திற்கும் அவசியமான வசதிகளை விருத்தி செய்தல்.
3	**மாணாக்கர்களின் முழுமையான அபிவிருத்தியை ஊக்குவிப்பதற்கான உபாயமுறையொன்றை வகுத்தமைக்கும் சூழலொன்றை உருவாக்குதல்.**	3.1 பாடத்தோடிணைந்த மற்றும் பாடத்திற்குப் புறம்பான செயற்பாடுகளின் ஊடாக மொத்த அபிவிருத்தியொன்றை ஏற்படுத்துதல். 3.2 மாணாக்கர்களின் ஆளுமை விருத்திக்கான நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல். 3.3 தேவையுள்ள மாணாக்கர்களுக்கு நலன்புரி முறைமையொன்றை ஊக்குவித்தல்.
4	**கற்பித்தலிலும் கற்றலிலும் சிறப்புநிலையை அடைந்துகொண்டு தகுதிவாய்ந்த, உந்தப்பட்ட பணியாட்குழுவொன்றுக்கு வழிப்படுத்தப்படுதல்.**	4.1 பணியாட்குழுவின் தொழில்சார் முன்னேற்றத்திற்கு கூடுதல் சந்தர்ப்பளித்தல். 4.2 மாணாக்கர் மற்றும் பணியாட்குழு அபிவிருத்தி அலகின் (SSDU) நோக்கெல்லையை போசித்தல்.
5	**மிக முன்னேறிய நிருவாகப் பொறிமுறைகளுடன்கூடிய நிதி ரீதியாக பலம் பொருந்திய, தன்னிறைவடைந்த ஒரு நிறுவகமாக மிளிர்தல்.**	5.1 தற்போதுள்ள நிதி முகாமைத்துவ முறைமையை முன்னேற்றுதலும் பலப்படுத்துதலும். 5.2 நிறுவகத்தின் வருமான உருவாக்குகையை முன்னேற்றுதல். 5.3 நிருவாக பணியாட்குழுவின் திறன்களையும் வினைத்திறனையும் முன்னேற்றுதல். 5.4 நிருவாக செயற்பாடுகளின் இயல்திறனை மேம்படுத்துதல்.
6	**சிறப்புநிலையை அடைந்துகொள்வதற்காக தற்போதுள்ள வசதிகளைத் தரமுயர்த்துதல்.**	6.1 தங்குமிட வசதிக்கு தேவைப்படும் உட்கட்டமைப்பு வசதிகளை முன்னேற்றுதல். 6.2 அதிநவீன ஆய்வுகூடங்கள், நூலகங்கள், Simulator அறைகள், விரிவுரை மண்டபங்கள் என்பவற்றை அபிவிருத்தி செய்தல். 6.3 பரீட்சை நடவடிக்கைகளுக்கு ஈடுபடுத்திக்கொள்ளக்கூடிய விதத்தில் வசதிகளை அபிவிருத்தி செய்தல். 6.4 தொழில்நுட்ப மேம்பாட்டு உபாயமுறைகளுக்காக தகவல் தொழில்நுட்ப இயலாற்றல்களைப் பலமடையச்செய்தல்.
7	**எண்ணிமமுறை (டிஜிட்டல்) நிலைமாற்றத்தின் ஊடாக செயற்பாட்டு சிறப்புநிலையை அடைதல்.**	7.1 செயற்பாட்டு சிறப்புநிலையையும் எண்ணிமமுறை (டிஜிட்டல்) நிலைமாற்றத்திற்கான தாபன இயல்திறனையும் கட்டியெழுப்புதல்.
8	**நிறுவகத்தின் அனைத்து மட்டங்களையும் தழுவிய உயர்மட்ட தர முகாமைத்துவ முறைமையொன்றை விருத்திசெய்தல்.**	8.1 நிறுவகத்திற்கு முழுதளவிலான தர முகாமைத்துவ முறைமையொன்றை உறுதிப்படுத்துதல்.

மீள நிறுவப்பட்டதை அடுத்து 2023 திசெம்பர் மாதம் வரை மொறட்டுவைப் பல்கலைக்கழக தொழில்நுட்ப நிறுவகத்தின் முன்னேற்றம்

மொறட்டுவைப் பல்கலைக்கழக தொழில்நுட்ப நிறுவகத்தின் மீள்நிறுவுகை மற்றும் அபிவிருத்திக் கருத்திட்டத்தின் கீழ் தொழில்நுட்ப நிறுவகம் (ITUM), 10.2 பில்லியன் ரூபா செலவில் ஹோமாகம, தியகமவில் அனைத்து அதிநவீன வசதிகளைக் கொண்ட ஒரு மனங்கவர் சூழலில் முழு நிறைவான ஒரு நிறுவனமாக 2017 மே மாதத்தில் மீள நிறுவப்பட்டது. பாடநெறிகளின் பரப்பை விஸ்தரித்து சேர்த்துக்கொள்ளப்படும் மாணாக்கர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பது நோக்காக இருந்தது. நிறுவகம், 2023 திசெம்பர் மாதம் வரை அடைந்த முன்னேற்றம் பற்றிய விபரங்கள் கீழ் தரப்பட்டுள்ளன.

1. கடந்த மூன்றாண்டுகளில் மாணாக்கர்களின் ஆட்சேர்ப்பு

2000 ஆம் ஆண்டு ஆரம்பம் முதல் கடந்த 17 வருடங்களாக தொழில்நுட்ப நிறுவகத்திற்கான ஆட்சேர்ப்புக்களின் எண்ணிக்கை 350 உடன் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. இருப்பினும், அது மீள நிறுவப்பட்டதை அடுத்து 2018 ஆம் ஆண்டில் எண்ணிக்கையில் 480 வரை மாணாக்கர்களின் ஆட்சேர்ப்பு வளர்ச்சியடைந்தது. 2020 ஆம் ஆண்டாகும்போது நிறுவகத்தின் மாணாக்கர்களின் எண்ணிக்கையிலான வளர்ச்சி 800 மாணாக்கர்களாக அதாவது, நூற்றுக்கு நூறு சதவீதத்தைத் தாண்டிய ஒரு துரித வளர்ச்சியை எட்டியது.

பாடத்துறை	2021	2022	2023
இரசாயனவியல்	50	50	50
சிவில்	200	200	192
மின்	100	100	101*
இலத்திரனியலும் தொலைத்தொடர்பும்	100	100	100
பொறிமுறை	100	100	101*
கடல்சார்	19	20	20
கப்பல்துறை	20	20	20
பொலிமர் (பல்படி)	50	45	50
புடவை மற்றும் ஆடைத் தொழில்நுட்பம்	60	60	60
தகவல் தொழில்நுட்பம்	100	100	100
மொத்தம்	**799**	**795**	**794**

* *சேர்த்துக்கொள்ளப்பட்ட வேறு 02 மாணாக்கர்கள் (முப்படைகள் மற்றும் பல்கலைக்கழக முறைமைகள் தொழில்நுட்ப அலுவலர்) – ஒரு மின் மாணாக்கரும் ஒரு பொறிமுறை மாணாக்கரும்.*

2. அரையாண்டுப் பருவ முறை

மொறட்டுவைப் பல்கலைக்கழக தொழில்நுட்ப நிறுவகம் ஹோமாகம, தியகமவில் மீள நிறுவப்படுவதற்கு முன்னர், தொழில்நுட்ப நிறுவகத்தினால் வருடாந்தம் தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா வழங்கப்பட்டது. இருப்பினும், தொழில்நுட்ப நிறுவகத்தின் கல்விசார் பணியாட்குழுவினால் மேற்கொள்ளப்பட்ட பரந்தளவிலான ஆய்வொன்றைத் தொடர்ந்து 2018 ஆம் ஆண்டின் ஆரம்பம் முதல் தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டத்தை அரையாண்டுப் பருவ முறையின் அடிப்படையில் முன்னெடுப்பதற்கு முடிவெடுக்கப்பட்டது. அதன் அடிப்படையில், மூன்று வருட தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டம் 6 அரையாண்டுப் பருவங்களைக் கொண்ட ஒரு நிகழ்ச்சித் திட்டமாக அதாவது, 4 அரையாண்டுகளைக் கொண்ட ஒரு கல்விசார் நிகழ்ச்சித் திட்டமாகவும், 2 அரையாண்டுகளைக் கொண்ட ஒரு பயிற்சி நிகழ்ச்சித் திட்டமாகவும் மாற்றமடைந்தது.

3. தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டத்திற்கான தகுதிச் சான்றிதழ்கள்

கற்கைக்கான ஒவ்வோர் அரையாண்டும் 25 கற்கைத் தகுதிச் சான்றிதழ்களைக் கொண்டதாக அமைவதுடன், ஒவ்வொரு கற்கைப் பயிற்சிக்கான அரையாண்டு பருவத்திற்கும் 06 தகுதிச் சான்றிதழ்களும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. அதன் அடிப்படையில், தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டத்திற்கு மொத்தமாக 112 முழுமையான தகுதிச் சான்றிதழ்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

4. நிதியும் நிருவாகமும்

2017 ஆம் ஆண்டிலும் 2020 ஆம் ஆண்டிலும் அனுமதிக்கப்பட்ட பணியாட்குழுவுக்கு உரிய பதவி உள்ளக இடமாற்றல்கள், பதவி உயர்வுகள் மற்றும் வெளிநிலை விண்ணப்பம் கோரல்களின் ஊடாக ஆட்சேர்ப்புக்களை பூர்த்தி செய்ய நிறுவகம் இயலுமை பெற்றது. 2021 ஆம் ஆண்டுக்கான மதிப்பீடு செய்யப்பட்ட பணியாட்குழுவினர் விபரம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் ஒப்புதலுடன் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு (DMS) சமர்ப்பிக்கப்பட்டது. எனினும், அதற்கான அனுமதி இதுவரை கிடைக்கப்பெறவில்லை.

நிறுவகத்தின் கற்கைப் பிரிவுகளின் விபரம் வருமாறு:-

- பொலிமர் (பல்படி) மற்றும் இரசாயனப் பொறியியல் தொழில்நுட்பம்
- பொறிமுறைப் பொறியியல் தொழில்நுட்பம்
- கடல்சார் பொறியியல் தொழில்நுட்பம்
- புடவை மற்றும் ஆடைத் தொழில்நுட்பம்
- சிவில் பொறியியல் தொழில்நுட்பம்
- இடைப் பாடவிதான கற்கைகள்
- மின், இலத்திரனியல் மற்றும் தொலைத்தொடர்புத் தொழில்நுட்பம்
- தகவல் தொழில்நுட்பம்

இணைப்பு அலுவலர் ஒருவரின் தலைமையில் இடைப் பாடவிதான கற்கைகள் பிரிவின் கீழ் ஆங்கிலமொழி கற்பித்தல் அலகொன்றை (ELTU) நிறுவுவதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் (UGC) ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இப்பிரிவு

நிறுவப்பட்டுள்ளதுடன், ஆண்டினுள் இப்பிரிவினால் முன்னெடுக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் மூலம் பெரும் எண்ணிக்கையான மாணாக்கர்கள் நன்மையடைந்தனர்.

ஏராளமான பலவீனங்கள் ஏற்படுவதைத் தவிர்த்துக்கொண்டு மொறட்டுவைப் பல்கலைக்கழக தொழில்நுட்ப நிறுவகத்தின் (ITUM) அடைவுகளை 2023 ஆம் ஆண்டில் பணிப்பாளர் முகாமைத்துவ சபைக்கு அறிக்கையிட்டார். குறைபாடுகளைத் தவிர்த்துக்கொள்வதற்காக முகாமைத்துவ சபையின் ஆலோசனைக்கமைய தொடர்ந்தும் அவசியமான சீர்படுத்தல்/ தடுப்பு/ முன் பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

5. <u>தர உறுதிப்பாட்டு அலகு</u>

நிறுவகத்திற்கு அங்கீகரிக்கப்பட்ட நியமங்கள் மற்றும் உடன்பட்ட உள்ளக தர உறுதிப்பாட்டு முறைமையொன்றிற்கான தேவை நீண்டகாலமாக நிலவியது. இந்நோக்கத்தை அடைந்துகொள்ளும் பொருட்டு தர உறுதிப்பாடு, தொடர்ச்சியான அபிவிருத்தி மற்றும் வினைத்திறனான செயலாற்றுகை ஆகிய விடயங்களை உறுதிசெய்யும் நோக்குடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் வழிகாட்டல்களுக்கு அமைய இணைப்பு அலுவலர் ஒருவரின் தலைமையில் தர உறுதிப்பாட்டு அலகொன்று நிறுவப்பட்டது. அதற்கமைய அனைத்து நிகழ்ச்சித்திட்ட கற்பித்தல் நடபடிமுறைகளும் தர மாதிரிகளுக்கு அமைய ஒழுங்கமைக்கப்பட்டு பயன்படுத்தப்படுகின்றன. அனைத்துப் படிநிலைகளிலும் தர உறுதிப்பாட்டை உறுதிசெய்வதற்காக தர உறுதிப்பாட்டு அலகு 2023 ஆம் ஆண்டிலும் மேலும் அபிவிருத்தி செய்யப்பட்டது.

6. <u>தொழில்நுட்ப நிறுவகத்தில் மாணாக்கர்களுக்கு தங்குமிடம் மற்றும் ஏனைய வசதிகளை வழங்குதல்</u>

அனைத்து மாணாக்கர்களுக்கும் தங்குவதற்கு விடுதி வசதியளிப்பது நிறுவகத்தின் ஒரு கொள்கையாகும். அதன் காரணமாக, 480 இரண்டாம் ஆண்டு மாணாக்கர்களுக்கும் 1600 முதலாம் ஆண்டு மாணாக்கர்களுக்கும் விடுதி வசதியளிக்கப்பட்டது. மாணாக்கர்கள் அனைவரும் வளவினுள் தங்கியிருக்கின்றனர். மாணாக்கர்களின் உடல் மற்றும் உள நலனை விருத்தி செய்யும் நோக்குடன் அனுபவம் வாய்ந்த இரு உடற்கல்விப் போதனாசிரியர்களின் வழிகாட்டலின் கீழ் முழுமையான தேகாப்பியாச மண்டபமொன்றும், உள்ளக மற்றும் திறந்தவெளி விளையாட்டு வசதிகளும், கீழ்நிலை பணியாட்குழுவொன்றின் உதவியுடன் மாணாக்கர்களுக்கு விளையாட்டு வசதிகளும் செய்துகொடுக்கப்பட்டுள்ளன. அனைத்து மாணாக்கர்களுக்கும் பெயரளவிலான விலையில் உணவுகளை வழங்குவதற்கு நிறுவகத்தின் மானிய உதவிபெறும் இரு உணவுச்சாலைகள் இயங்குகின்றன. அலுவலக நேரத்தில் தகுதி வாய்ந்த மருத்துவ பணியாட்குழுவொன்றின் கீழ் மருத்துவ நிலையமொன்று இயங்குவதுடன், இராக் காலங்களில் தேவை ஏற்படும்போது இயங்கும் போக்குவரத்துச் சேவையொன்றும் அமுல்படுத்தப்படுகிறது.

7. தொழில்நுட்ப நிறுவக (ITUM) பணியாட்குழுவுக்கு நலன்புரி வசதிகளை வழங்குதல்

பணியாட்குழு உறுப்பினர்களின் கோரிக்கையின் பேரில் அவர்களுக்கு குடிமனைகள் வழங்கப்பட்டுள்ளன. இது தவிர, கணிசமான கல்விசார் மற்றும் கல்விசாரா பணியாட்குழு உறுப்பினர்களுக்கு விடுதிகளில் வெற்றிடம் நிலவும் விடுதி அறைகளில் தங்குமிட வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. பணியாட்குழுவினருக்கான உணவுச்சாலையொன்றையும் பகற்கால பேணல் நிலையமொன்றையும் ஊழியர் நலன்புரிச் சங்கத்தின் மேற்பார்வையின் கீழ் நிறுவகம் வழங்கியுள்ளது. ஹோமாகம இலங்கை வங்கியின் கிளையொன்றை தொழில்நுட்ப நிறுவக வர்த்தக கட்டிடத்தொகுதியில் நிறுவி மாணாக்கர்களுக்கும் பணியாட்குழுவுக்கும் வங்கி வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. அங்கு தங்கியிருக்கும் பணியாட்குழுவினதும் மாணாக்கர்களினதும் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்காக காகில்ஸ் ∴புட் சிற்றி நிறுவனத்தின் கிளையொன்றும், சிற்றுண்டிச் சாலையொன்றுயும், புத்தக விற்பனை நிலையங்களும் அவ்வர்த்தகக் கட்டிடத்தொகுதியில் இயங்கி வருகிறது.

02. மொறட்டுவைப் பல்கலைக்கழக தொழில்நுட்ப நிறுவகத்திற்கான எதிர்கால திட்ட மதிப்பீட்டறிக்கை

1. நிகழ்ச்சித்திட்ட நிலைமாற்றமும் கல்வி அபிவிருத்தியும்

நோக்கம் : பங்கீடுபாட்டாளர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கும் எதிர்காலத்தில் பாடநெறிகளின் கவர்ச்சிநிலையை அதிகரிப்பதற்கும் தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா (NDT) நிகழ்ச்சித்திட்டத்தை பட்ட நிகழ்ச்சித்திட்டமொன்று வரை தரமுயர்த்துதல்.

எதிர்வுகூறப்பட்ட பெறுபேறுகள்:

• **அதிகரித்த ஆட்சேர்ப்புக்கள்:** பட்ட நிகழ்ச்சித்திட்டமொன்றுக்கு நிலைமாற்றமடைவதுடன் டிப்ளோமா ஒன்றை விட பட்டமொன்றுக்கு விருப்பமான விண்ணப்பதாரிகள் உட்பட, நிறுவகத்திற்கு அதிக எண்ணிக்கையான மாணாக்கர்களை கவர்ந்துகொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. வருடாந்த ஆட்சேர்ப்புக்களுக்கும் முழுதுமளாவிய மாணாக்கர் சமுதாயத்தின் நிலையான அதிகரிப்பொன்றுக்கும் இது காரணமாக அமையும்.

• **மேம்படுத்திய பாடவிதானம்:** புதிய பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் நவீன கைத்தொழில் செல்நெறிகள் போன்ற தொழில்நுட்பங்களை உட்படுத்தி இற்றைப்படுத்திய பாடவிதானமொன்று உள்ளடங்குவதுடன், அதன்மூலம் தொழிற்சந்தைக்கு மாணாக்கர்களை மிகச் சிறப்பாக தயார்படுத்தும்.

• **பலப்படுத்திய கைத்தொழில் தொடர்புகள்:** பட்ட நிகழ்ச்சித்திட்டத்தில் மேம்பட்ட கைத்தொழில் பயிற்சித் தராதரங்களும், மிகவும் அகல்விரிவான தொழில் வழிகாட்டல் செயற்பாடுகளும் அடங்கும். கைத்தொழில் பங்காளர்களுடன் பலமான தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்வதற்கும் முன்னேற்றிய தொழில் எதிர்பார்க்கைகளை மாணாக்கர்களுக்கு வழங்குதலும்.

2. வள உகப்பாக்கமும் உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தியும்

நோக்கம்: பட்ட நிகழ்ச்சித்திட்டமொன்றுக்கு நிலைமாறுவதற்கும் அத்துடன் அதிகரிக்கும் மாணாக்கர்களின் எண்ணிக்கைக்கு வசதியளிப்பதற்கும் தற்போதுள்ள உட்கட்டமைப்பு வசதிகள், மனித வளங்கள் மற்றும் பொது நிதிப் பாவனையை உகப்பாக்குதல்.

எதிர்வுகூறப்பட்ட பெறுபேறுகள்:

• **வளங்களை வினைத்திறனான முறையில் பயன்படுத்துதல்:** இச்செயன்முறையின் மூலம் நிறுவகத்தின் வகுப்பறைகள், ஆய்வுகூடங்கள், விடுதி வசதிகள் மற்றும் பணியாட்குழுவின் தேர்ச்சிநிலையும் உள்ளிட்ட பௌதிக உட்கட்டமைப்பு வசதிகளை மிகச் சிறப்பாக பயன்படுத்துவதற்கு வாய்ப்பளிக்கப்படுகிறது.

• **பேண்தகு எரிசக்தித் தீர்வுகள்:** இன்றைய எரிசக்தித் தேவைகளுக்கும் தற்போதுள்ள நிதியங்களுக்கும் இடையிலான இடைவெளியை நிரப்புமுகமாக பேண்தகுநிலை, கிரய வினைத்திறன் என்பவற்றை ஊக்கவிப்பதற்கு மாற்று சக்தி மூலங்களை தேர்வாய்வு செய்வதற்கு நிறுவகம் திட்டமிடுகிறது.

• **வசதிகளை விஸ்தரித்தல்:** மாணாக்கர்களின் எண்ணிக்கையிலான அதிகரிப்பின்படி, விஸ்தரிக்கப்பட்ட பாடவிதானத்தை ஆதரிப்பதற்கும் தரமான கல்வியை உறுதிப்படுத்துவதற்கும் புதிய கல்விக் கட்டிடங்களும் தரமுயர்த்தப்பட்ட ஆய்வுகூடங்களும் உள்ளிட்ட மேலதிக வசதிகள் அபிவிருத்தி செய்யப்படலாம்.

3. நிதிசார் பேண்தகுநிலையும் சுய நிதியீட்ட செயல்முனைப்புகளும்

நோக்கம்: சுய நிதியீட்ட செயற்பாடுகளும் வினைத்திறனான வரவுசெலவுத்திட்ட முகாமைத்துவமும் ஊடாக நிறுவகத்தின் நிதி உறுதிப்பாட்டை முன்னேற்றுதல்.

எதிர்வுகூறப்பட்ட பெறுபேறுகள்:

- **அதிகரித்த வருமான மார்க்கங்கள்:** ஆராய்ச்சி ஒத்துழைப்புகள், உசாவுகைச் சேவைகள், குறுகிய கால பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் போன்ற சுய நிதியீட்ட செயற்பாடுகளை விரிவாக்குவதன் மூலம் நிறுவகத்திற்கு அதன் செயற்பாட்டு மற்றும் அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்கு மேலதிக வருமானமொன்றை உருவாக்கிக்கொள்ள முடியும்.

- **கிரய முகாமைத்துவம்:** வினைத்திறனாகவும் பயன்கூர் விதத்திலும் பொது நிதி பயன்படுத்தப்படுவதை உறுதிப்படுத்தி, செலவுகளைக் குறைப்பதன் மீதும் வளப் பாவனையை உகப்பாக்குவதன் மீதும் நிறுவனம் தொடர்ந்தும் கவனம் செலுத்தும்.

4. நிறுவன அபிவிருத்தியும் பங்கீடுபாட்டாளர்களின் ஈடுபாடும்

நோக்கம்: தரமான கல்விக்கும், அதிநவீன வசதிகளுக்கும், பலமான கைத்தொழில் தொடர்புகளுக்குமான பிரபலமான, முன்னணி கல்வி நிறுவனமொன்றாக தொழில்நுட்ப நிறுவகத்தை நிறுவுதல்.

எதிர்வுகூறப்பட்ட பெறுபேறுகள்:

- **புகழைக் கட்டியெழுப்புதல்:** மேம்பட்ட வசதிகளுடனும் நவீன பாடவிதானங்களுடனும் தொடர்புடைய பட்ட நிகழ்ச்சித்திட்டமொன்றை அறிமுகப்படுத்துவதானது நிறுவனத்தின் புகழை உறுதிப்பாடு அடையச்செய்வதுடன், உயர் மட்டத்தில் மாணாக்கர்களையும் கல்விப் பணியாட்குழுவையும் கவரும்.

- **பங்கீடுபாட்டாளர்களின் திருப்திநிலை:** மாணாக்கர்கள், பணியாட்குழுவினர் மற்றும் ஏனைய பங்கீடுபாட்டாளர்களுடன் தொடர்ச்சியான பின்னூட்டலுடனும் ஒத்துழைப்புடனும் செயலாற்றுதல். அவர்களின் தேவைகளையும் எதிர்பார்ப்புகளையும் தொடர்ந்தும் நிறைவேற்றுவதை நிறுவகம் உறுதிப்படுத்தும்.

- **நீண்டகால உபாயமுறைத் திட்டமிடல்:** நிறுவகம், அதன் கல்விசார் வழங்கீடுகளையும் பாடநெறிகளையும் இன்னும் மேம்படுத்துவதற்கும் அதன் தாக்கத்தை விரிவுபடுத்துவதற்கும், புதிய பல்கலைக்கழகமொன்றை நிறுவும் சாத்தியப்பாடு உள்ளிட்ட நீண்டகால உபாயமுறைத் திட்டங்களின் அடிப்படையில் செயற்படும்.

தொழில்நுட்ப நிறுவக வசதிகள்

வருமானத்தை உருவாக்கும் நோக்குடன் பல்நோக்கு மண்டபம், கேட்போர்கூடம், பதவிநிலையினர் அபிவிருத்தி நிலையம், வாடி வீடு மற்றும் கடைத்தொகுதி என்பன வர்த்தக விளம்பரங்கள் மூலம் ஊக்குவிக்கப்படுகிறது.

சூரியவலுத் தொகுதியொன்றை நிறுவுவதற்கும் மின்சார சிட்டையை ஈடுசெய்வதற்கும் நிதி உருவாக்குகைக்கான சாத்தியக்கூறு பற்றி ஆராய்வதற்கும் சாத்தியவள ஆய்வொன்று முடுக்கிவிடப்பட்டுள்ளது. தொழில்நுட்ப நிறுவகத்தின் கடைத்தொகுதியிலுள்ள கடைகள் அனைத்தையும் பொது வசதிகளையும் பொது மக்களுக்கு வாடகைக்கு விடுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நூலக வசதிகள்

நிறுவகத்தில் கற்கைக் காலத்தினுள் தகவல் மற்றும் கல்விச் சூழலுக்கு காலப் பொருத்தமுள்ள, பயன்கூர் அணுகுமுறையொன்றை வழங்குவதன் மூலம் கற்றல், கற்பித்தல் மற்றும் ஆராய்ச்சிச் செயன்முறையொன்றுக்கான நூலக வசதிகள் வழங்கப்படுகின்றன. http://opac.itum.mrt.ac.lk இணையவழி பெயர்க்கொத்தின் ஊடாக உட்பிரவேசிக்கக்கூடிய ஏராளமான அச்சு மற்றும் இலத்திரனியல் வளங்கள் அதனைப் பாதுகாக்கின்றன. நிறுவனம்சார் கற்கை வகிபாகத்தை அடைந்துகொள்வதற்கு நூலகத்தின் ஊடாக ஏராளமான சேவைகளும் வசதிகளும் வழங்கப்படுகின்றன. ITUM – பிரதான கட்டிடத்தின் 2 ஆம் மாடியில் (U2) இந்நூலகம் அமைந்துள்ளது. இந்நூலகம், காலை மு.ப. 8.30 முதல் பி.ப. 05.15 வரை திறந்திருக்கும். அது வார நாட்களில் 08.30 மணி முதல் 04.15 மணி வரையும், சனிக்கிழமைகளிலும் பரீட்சை காலப்பகுதியிலும் நீடிக்கப்பட்ட நேரங்கள் வழங்கப்படுகின்றன. தொழில்நுட்ப அறிவுலகை நுணுகி ஆராய்வதற்கு நாம் அனைவரையும் வரவேற்கின்றோம்! (http://web.itum.mrt.ac.lk/library).

03. தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா பாடநெறி மற்றும் மொறட்டுவைப் பல்கலைக்கழக தொழில்நுட்ப நிறுவகம் நிறுவப்பட்ட வரலாறு பற்றிய ஒரு சுருக்கமான அறிமுகம்

மருதானை கனிஷ்ட தொழில்நுட்ப வித்தியாலயத்தினால் வழங்கப்பட்ட இரண்டு ஆண்டு கால கனிஷ்ட தொழில்நுட்ப அலுவலர் பாடநெறியும், இலண்டன் பல்கலைக்கழக பொறியியல் பட்டத்திற்கு மாணாக்கர்களைத் தயார்படுத்தி வழங்கிய நான்கு ஆண்டு கால தொழில்நுட்ப டிப்ளோமாவும் காரணமாக தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா பாடநெறியின் ஆரம்பம், மருதானை கனிஷ்ட தொழில்நுட்ப வித்தியாலயம் வரை நீண்ட வரலாறொன்றைக் கொண்டதாகும். கனிஷ்ட தொழில்நுட்ப அலுவலர் பாடநெறி மிகச் சிறந்த வரவேற்பைப் பெற்ற நடுத்தர மட்ட தொழில்நுட்பப் பாடநெறியொன்றாகும். அதனைப் பூர்த்திசெய்தவர்கள் நாட்டின் பொறியியல் துறையின் முன்னேற்றத்திற்கு பாரியளவு பங்களிப்புச் செய்தனர்.

1960 ஆம் ஆண்டில் மொறட்டுவை, கட்டுபெத்த பிரயோக தொழில்நுட்ப நிறுவகம் (Institute of Practical Technology) (IPT) தாபிக்கப்பட்டவுடன் கனிஷ்ட தொழில்நுட்ப அலுவலர் பாடநெறி மருதானையில் இருந்து மொறட்டுவைக்கு மாற்றப்பட்டது. பிரயோக ரீதியான பாவனையை நோக்காகக்கொண்ட நடுத்தர மட்ட பொறியியல் தொழில்நுட்பப் பாடநெறியை அபிவிருத்தி செய்வதற்கும், அமுல்படுத்துவதற்கும் கனேடிய அரசாங்கத்தின் உதவுடன் பிரயோகத் தொழில்நுட்ப நிறுவகம் ஆரம்பிக்கப்பட்டது.

பிரயோகத் தொழில்நுட்ப நிறுவகம் 1966 ஆம் ஆண்டில் இலங்கை தொழில்நுட்ப வித்தியாலயமாக தரமுயர்த்தப்பட்டதுடன், அதில் துரித பாடநெறி பல்வகைப்படுத்தலொன்று இடம்பெற்றது. இலங்கை தொழில்நுட்ப வித்தியாயலத்தினால் ஐந்தாண்டு கால தொழில்நுட்ப டிப்ளோமா பாடநெறியொன்று ஆரம்பிக்கப்பட்டதுடன், கனிஷ்ட தொழில்நுட்ப அலுவலர் பாடநெறிக்கு ஓராண்டு கால தொழிற்சாலைப் பயிற்சியொன்றை அறிமுகப்படுத்தி அது தேசிய தொழில்நுட்ப டிப்ளோமாவுக்கு (NDT) தகைமை பெறும் மூன்றாண்டு கால பாடநெறியொன்றாக மாற்றப்பட்டது. 1972 ஆம் ஆண்டில் இலங்கை தொழில்நுட்ப வித்தியாலயம் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் வளாகமொன்றாக தரமுயர்த்தப்பட்டு பின்பு மொறட்டுவைப் பல்கலைக்கழகமாக படிப்படியாக வளர்ச்சியடைந்தது. அதனைத் தொடர்ந்து உயர்கல்வி அமைச்சுக்காக தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்பட்டது.

1987 ஆம் ஆண்டில் தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 29(உ) ஆம் பிரிவின் கீழ் மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தின் உள்ளக பாடநெறியொன்றாக மாற்றப்பட்டது. க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சித்தியடைவது அதற்கு அனுமதி பெறுவதற்கான கல்வித் தகைமையாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. அடிப்படையில் தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா மற்றும் அதற்குச் சமமான மட்டத்தில் பாடநெறிகளைத் தொடர்வதற்கு மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தின் கீழுள்ள நிறுவனமொன்றாக மொறட்டுவைப் பல்கலைக்கழக தொழில்நுட்ப நிறுவகம் (ITUM) 2000 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்கச் சட்டத்தின் கீழ் 2000 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. மொறட்டுவைப் பல்கலைக்கழக தொழில்நுட்ப நிறுவகம் முகாமைச் சபையொன்றின் கீழ் இயங்கி வருவதுடன், பாடநெறிகளை சுயாதீனமாக விருத்திசெய்யுமுகமாக நிறுவகத்தை தனிவேறான நிறுவனமொன்றாக நிறுவுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா பாடநெறி பற்றிய ஒரு சுருக்கமான அறிமுகம்

எமது நாட்டின் கைத்தொழில்களுக்கு பல துறைகளிலிருந்தும் தேவையான பொறியியல் டிப்ளோமாதாரிகளை உருவாக்குவதே பாடநெறியின் முக்கிய நோக்கமாகும். நிறுவகத்தினால் தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டம் ஆறு(6) பாடங்களை உள்ளடக்கியதாக முன்னெடுக்கப்படுவதுடன், அதற்கு மொத்தமாக 800 பேர் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர். நிறுவகத்தினால் வழங்கப்படும் பாடநெறிகள் பின்வருமாறு:

இரசாயனப் பொறியியல் தொழில்நுட்பம்	-	50
சிவில் பொறியியல் தொழில்நுட்பம்	-	200
மின் பொறியியல் தொழில்நுட்பம்	-	100
இலத்திரனியல் மற்றும் தொலைத்தொடர்பு பொறியியல் தொழில்நுட்பம்	-	100
கடல்சார் பொறியியல் தொழில்நுட்பம்	-	20
பொறிமுறைப் பொறியியல் தொழில்நுட்பம்	-	100
கப்பற்றுறைக் கற்கைகள்	-	20
பொலிமர் (பல்படி) தொழில்நுட்பம்	-	50
புடவை மற்றும் ஆடைத் தொழில்நுட்பம்	-	60
தகவல் தொழில்நுட்பம்	-	100

இது தவிர, முப்படையினருக்கும் பல்கலைக்கழக கல்விசாரா பணியாட்குழுவுக்கும் ஆகக்கூடியது 5 சேர்த்துக்கொள்ளல்கள் வரை ஒதுக்கப்படும்.

தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா பாடநெறிக்கு சேர்த்துக்கொள்ளப்படல் முறையான ஒரு செயன்முறையின் ஊடாக மேற்கொள்ளப்படுகிறது. கடந்த மூன்று ஆண்டுகள் வரை உயர்தரப் பரீட்சைகளுக்குத் தோற்றி ஒரே தடவையில் பௌதிகவியல், இரசாயனவியல், இணைந்த கணிதம், உயர் கணிதம் ஆகிய பாடங்களில் ஆகக் குறைந்தது மூன்று பாடங்களுக்கு சாதாரண சித்தியைப் பெற்றுக்கொண்ட மாணவர்களுக்கு இதற்கு விண்ணப்பிக்க முடியும். Z- புள்ளிகளை அடிப்படையாகக்கொண்டு தெரிவுசெய்யப்படும் மாணவர்கள் பின்னர் தகுதிகாண் பரீட்சையில் பெற்றுக்கொண்ட புள்ளிகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்படுவர்.

பரிபூரணமான டிப்ளோமாதாரி ஒருவர் துறையில் தொழில்சார் பொறியியலாளர் ஒருவர் அல்லது முகாமையாளர் ஒருவரும் உழைப்பாளர் சேனைக்கு இடையில் இடையீட்டு ஒருங்கிணைப்பாளர் ஒருவராக செயலாற்ற எதிர்பார்க்கப்படுகிறது. இந்த வகிபாகத்திற்கு டிப்ளோமாதாரி ஒருவரை தொழில்ரீதியாக அபிவிருத்தி செய்வதுடன் அவரது தொடர்பாடல் மற்றும் முகாமைத்துவத் திறன்களை மேம்படுத்துவது அவசியமாகும். அவர் தெரிவுசெய்த கற்கைத் துறையில் கல்வி பெற வேண்டும் என்பதுடன், அதன் மூலம் அவருக்கு தொழில்சார் பொறியியலாளரின் புத்தாக்க/ படைப்புகளை மதிக்க முடியும். அதேபோல், கீழ்நிலை அலுவலர்களுடன் தொடர்பாடல் செய்து அத்தகைய புத்தாக்க/படைப்புகளை ஒரு யதார்த்தமாக மாற்றியமைக்கக்கூடியதாக இருக்க வேண்டும்.

அதன்படி, பாடநெறி இரண்டு ஆண்டு கால கற்கை காலப்பகுதியொன்றையும் 06 அரையாண்டுப் பருவங்களையும் கொண்ட ஓராண்டு கைத்தொழில் பயிற்சியொன்றையும் உள்ளடக்கியதாகும்.

முதலாவது, இரண்டாவது அரையாண்டு கற்கைத் தவணையில் பாட அலகுகள் பிரதானமாக அடிப்படை விஞ்ஞானங்களில் மாணாக்கரின் அறிவைச் சமப்படுத்துதல், ஒருங்கிணைத்தல், முன்னேற்றுதல் அத்துடன் அவரால் தெரிவுசெய்யப்பட்டுள்ள விசேட கற்கைத் துறையை அறிமுகப்படுத்துவதற்கானவையாகும். பொறியியல் பயிற்சிக்கு அவசியமான அடிப்படைத் திறன்கள் சிலவற்றுக்கும் இங்கு மாணவர்கள் உள்ளாக்கப்படுவர். (உதாரணமாக: தொழிற்சாலைத் தொழில்நுட்பமும் பொறியியல் வரைதலும்.)

பின்வரும் விடயங்கள் காரணமாக ஆங்கிலமொழி முதலாம், இரண்டாம் அரையாண்டுப் பருவங்களில் கட்டாயமான ஒரு பாடமாக அமையும்:

i. தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா பாடநெறி ஆங்கில மொழி மூலம் நடாத்தப்படுகிறது. பெரும்பாலான மாணாக்கர்கள் க.பொ.த. உயர்தரம் வரை தமது கல்வி நடவடிக்கைகளை சிங்கள அல்லது தமிழ் மொழிமூலம் மேற்கொண்டுள்ளமையால், ஆங்கில மொழி மொடியூல் தொடர்பாடல் திறன்களை வளர்ப்பதை இலக்காகக்கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது.

ii. தொடர்பாடல், டிப்ளோமாதாரியின் தொழில்சார் நடத்தையில் முக்கிய பங்கை வகிக்கின்றது. ஆதலால், மாணவர்கள் ஆங்கிலமொழி பற்றிய அறிவையும், பேச்சாற்றலும் அறிக்கைகளை எழுதுதலும் பற்றிய தமது திறன்களையும் விருத்தி செய்துகொள்ள வேண்டும்.

மூன்றாவது, நான்காவது அரையாண்டுகளில் பாட அலகுகளில் மாணாக்கர்களினால் தெரிவுசெய்யப்பட்ட பாடத்துறையின் பொறியியல் தோற்றப்பாடுகளும் பிரயோகங்களும் முக்கியமாக அடங்கும்.

குறித்த கைத்தொழிலில் பிரயோக ரீதியான பயிற்சியைப் பெற்றுக்கொள்வதற்கு ஐந்தாவது, ஆறாவது கற்கைத் தவணைகள் ஒதுக்கப்படும். தேசிய தொழிற்பயிலுநர், கைத்தொழிற்பயிற்சி அதிகாரசபை (NAITA) தொழில்நுட்ப நிறுவகத்தின் (ITUM) பயிற்சிப் பொறியியலாளருடன் இணைந்து பயிற்சிக்கான நிறுவனங்களை ஏற்பாடுசெய்து கொடுக்கும்.

பல்கலைக்கழகத்தினால் அனுமதிக்கப்பட்ட செயலாற்றுகை முறைமைகளின்படி மூன்றாண்டு கால கல்வி மற்றும் பயிற்சியை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்த மாணாக்கர்களுக்கு சாதாரண, திறமை அல்லது அதிதிறமைச் சித்திகளுடன் தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா சான்றிதழ் வழங்கப்படும்.

தேசிய தொழில்நுட்ப டிப்ளோமாதாரிகள் தகைமைகளைப் பூர்த்திசெய்து ஓராண்டினுள் அவர்களின் தொழில் ஈடுபடுத்துகை 100% என்று பின்தொடராய்வுகளின் மூலம் தெரிய வந்துள்ளது.

மொறட்டுவைப் பல்கலைக்கழக தொழில்நுட்ப நிறுவகத்தில் அமுலிலுள்ள கல்விப் பாடவிதானம் 2005 ஆம் ஆண்டில் முதலாம் ஆண்டு மாணவர்களுக்காக அறிமுகப்படுத்தப்பட்டதுடன், 2006 ஆம் ஆண்டில் இரண்டாம் ஆண்டு மாணாக்கர்களுக்காக அறிமுகப்படுத்தப்பட்டது. தொழில்நுட்ப உலகின் இன்றைய முன்னேறிய தொழில்நுட்ப முறைகளை அதற்குச் சமமாக நடாத்தி தெரிவுசெய்யப்பட்ட கற்கைத் துறைகளில் மாணாக்கர்களின் அறிவை விருத்திசெய்வதே அதன் நோக்கமாகும். நீண்டகாலத்திற்குப் பிறகு தொழில்நுட்ப நிறுவகத்தின் (ITUM) மீள்நிறுவுகை மற்றும் அபிவிருத்திக் கருத்திட்டத்தின் மூலம் தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா பாடவிதானம் விருத்தி செய்யப்பட்டு இற்றைப்படுத்தப்பட்டது. கற்கை நடவடிக்கைகள், 2018 ஆம் ஆண்டில் ஆண்டு அடிப்படையிலிருந்து ஆறு மாத அடிப்படைக்கு மாற்றப்பட்டது.

04. நிறுவனக் கட்டமைப்பு – மொறட்டுவைப் பல்கலைக்கழக தொழில்நுட்ப நிறுவகம்



05. முகாமைச் சபை உறுப்பினர்கள்

01	மேஜர் ஜெனரல் (ஓய்வுபெற்ற)	எஸ்.கே.	திருநாவுக்கரசு	பணிப்பாளர் (2021.02.16 முதல்)
02	திருமதி	கே.ரி.எஸ்.	விஜேசிறிவர்தன	உயர்கல்வி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளரினால் பெயர்குறித்தல்
03	திரு	பீ.ஆர்.	அஜித் விஜேசிங்க	கப்பற்றுறை விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளரினால் பெயர்குறித்தல்
04	கலாநிதி	டப்.எம்.எஸ்.	விஜேசிங்க	தேசிய தொழிற்பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபையின் (NAITA) தவிசாளரினால் பெயர்குறித்தல்
05	பேராசிரியர்	கே.ரி.எம்.யூ.	ஹேமபால	மொறட்டுவைப் பல்கலைக்கழக பொறியியல் பீடத்தின் பீடாதிபதி
06	பேராசிரியர் (திருமதி)	வை.ஜீ.	சந்தநாயக்க	மொறட்டுவைப் பல்கலைக்கழக கட்டிடக்கலை பீடத்தின் பீடாதிபதி
07	பேராசிரியர்	ரொஹான்	சமரஜீவ	கவுன்சிலினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்டவர் (2023.02.16 முதல் 2026.02.15 வரை)
08	பேராசிரியர்	யூ.பீ.	நவகமுவ	மூதவையினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்டவர் (2023.06.21 முதல் 2023.06.20 வரை)
09	திரு	ஜீ.ஜீ.	ஜயரத்ன	BOS/ ITUM இன் பெயர்குறித்து நியமிக்கப்பட்டவர்கள் (2023.10.12 முதல் 2026.10.11 வரை)
10	கலாநிதி (திருமதி)	கே.எம்.டப்ளியு.	அபேகோன்	BOS/ ITUM இன் பெயர்குறித்து நியமிக்கப்பட்டவர்கள் (2023.11.10 முதல் 2026.11.09 வரை)
11	கலாநிதி	பிரியந்த	பிரேமகுமார	UGC இனால் பெயர்குறித்து நியமிக்கப்பட்டவர்கள் (2023.01.16 முதல் 2026.01.15 வரை)
12	பேராசிரியர்	ஜே.கே.டி.எஸ்.	ஜயநெத்தி	
13	சட்டத்தரணி	என்.கே.	அபேரத்ன டயஸ்	

06. தொடர்புகொள்வதற்கான தகவல்கள்



அஞ்சல் முகவரி:	மொறட்டுவைப் பல்கலைக்கழக தொழில்நுட்ப நிறுவகம், தியகம, ஹோமாகம, இலங்கை.		
தொலைபேசி இல:	பணிப்பாளர்	:	011 2124001
	பொது	:	011 2124000
	பெக்ஸ்	:	011 2117030
	மின்னஞ்சல் முகவரி	:	director@itum.mrt.ac.lk

07. பணியாட்குழுவும் மாணாக்கர்களும் பற்றிய விபரங்கள்:

பிரிவு	பாடநெறி	மொத்த மாணாக்கர்கள் எண்ணிக்கை	மொத்த கல்விசார் பணியாட்குழு				மொத்த கல்விசாரா பணியாட்குழு	
சிவில் பொறியியல் தொழில்நுட்பம்	NDT	பயிற்சி - 198 S IV - 197 S II - 197 S I - 187	விரிவுரையாளர் P (Study leaves sabbatical leave) V C	09 02 01 06 02	போதனாசிரியர் T V	11 08	P C	04 02
பொறிமுறைப் பொறியியல் தொழில்நுட்பம்	NDT	பயிற்சி - 97 S IV - 98 S II - 95 S I - 98	விரிவுரையாளர் P C V	07 01 01	போதனாசிரியர் T V	07 14	P	25
கடல்சார் கற்கைகள்	NDT	பயிற்சி - 40 S IV - 39 S II - 40 S I - 40	விரிவுரையாளர் P V C	01 0 01	போதனாசிரியர் T NDA L NDA I	0 09 02	P C	02 02
பல்படி (பொலிமர்) மற்றும் இரசாயனப் பொறியியல் தொழில்நுட்பம்	NDT	பயிற்சி - 97 S IV - 92 S II - 88 S I - 97	விரிவுரையாளர் P V	10 07	போதனாசிரியர் T V	06 03	P	10
புடவை மற்றும் ஆடைத் தொழில்நுட்பம்	NDT	பயிற்சி - 60 S IV - 60 S II - 59 S I - 60	விரிவுரையாளர் P V	06 02	போதனாசிரியர் T V	0 01	P	08
மின், இலத்திரனியல், மற்றும் தொலைத்தொடர்புப் பொறியியல் தொழில்நுட்பம்	NDT	பயிற்சி - 199 S IV - 198 S II - 200 S I - 198	விரிவுரையாளர் P V	09 04	போதனாசிரியர் T V	11 05	P T	11 01
தகவல் தொழில்நுட்பம்	NDT	பயிற்சி - 98 S IV - 100 S II - 98 S I - 99	விரிவுரையாளர் P V	03 06	போதனாசிரியர் T V	09 01	P	01
இடைப் பாடவிதான கற்கைகள்	NDT	S IV - 784 S II - 778 S I - 779	விரிவுரையாளர் P V C	09 04 01	போதனாசிரியர் T V	03 06	P	03

P - நிரந்தர (Permanent)
C - ஒப்பந்த (Contract)
T - தற்காலிக (Temporary)
V - வருகைதரு (Visiting)

NDA L - கப்பற்றுறை இராஜதந்திரிகள் சங்கத்தின் விரிவுரையாளர் (Nautical Diplomats Association Lecturer)
NDA I - கப்பற்றுறை இராஜதந்திரிகள் சங்கத்தின் போதனாசிரியர் (Nautical Diplomats Association Instructor)

ITUM பதவியினர்

சேவை படிநிலை	சம்பளக் குறியீடு	அனுமதித்த பதவியினர் எண்ணிக்கை	தற்போதுள்ள பதவியினர் எண்ணிக்கை	பதவி வெற்றிடங்கள்
முதனிலை				
முதனிலைத் தரம் - பயிற்றப்படாத	PL-1	20	14	6
முதனிலைத் தரம் - பகுதியளவு தேர்ச்சி	PL-2	35	22	13
முதனிலைத் தரம் - தேர்ச்சி	PL-3	29	19	10
இரண்டாம்நிலை				
முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பம் அல்லாத	U-MN 1	33	33	0
முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்ப	U – MT 1	33	15	18
உதவி அலுவலர்கள் - பகுதி 2	U – MN 2	3	3	0
உதவி அலுவலர்கள் - பகுதி 1	U – MN 3	4	2	2
பதவிநிலை உதவியாளர்/ மேற்றரம், சிரேட்ட பதவிநிலை உதவியாளர்	U – MN 4	10	10	0
மூன்றாம்நிலை				
கற்கை உதவி – பகுதி 2	U – AS 1	7	2	5
கனிஷ்ட நிறைவேற்று/முகாமையாளர்கள்	U – EX1	6	4	2
கற்கை உதவி – பகுதி 1	U – AS 2	3	2 (ஒப்பந்த)	1
தற்காலிக போதனாசிரியர்	U – AC 1	50	42	8
சிரேஷ்ட				
மருத்துவ அதிகாரி	U – MO 1	1	0	1
பிரதான மருத்துவ அதிகாரி	U- MO 2	-	-	-
நடுத்தர மட்ட நிறைவேற்றுநர்கள்	U – EX 2	1	1	0
நடுத்தர மட்ட நிறைவேற்றுநர்கள்	U – EX 2(a)	1	1	0
சிரேஷ்ட நிறைவேற்று அதிகாரிகள்	U – EX 3	-	-	-
விரிவுரையாளர்கள்	U – AC 3	79	57	22
உதவிப் பேராசிரியர்கள்	U – AC 4			
பேராசிரியர்கள்/ முதுநிலைப் பேராசிரியர்கள்	U – AC 5			

7.1 மாணாக்கர்களின் விபரங்கள்

தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா, இரசாயன, புடவை, பொலிமர், சிவில், மின், இலத்திரனியல், கடல்சார், பொறிமுறை, கப்பற்றுறைசார், தகவல் தொழில்நுட்ப ஆகிய பத்து பாடங்களுக்கு 800 மாணவர்கள் பதிவுசெய்து கொண்டனர்.

கற்கைத் துறை	பாடநெறி	ஆட்சேர்ப்பு 2023	2 ஆம் அரை யாண்டுப் பருவ மாணாக்கர்கள்	4 ஆம் அரை யாண்டுப் பரும மாணாக்கர்கள்	கைத் தொழிற் பயிற்சி மாணாக்கர்கள்	மொத்த டிப்ளோமா தாரி மாணாக்கர்கள்
சிவில் பொறியியல் தொழில்நுட்பம்	NDT (தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா)	200	200	194	191	106
பொறிமுறைப் பொறியியல் தொழில்நுட்பம்	NDT (தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா)	100	85	90	100	65
கடல்சார் கற்கைகள்	NDT (தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா)	40	39	38	40	19
பொலிமர் மற்றும் இரசாயனப் பொறியியல் தொழில்நுட்பம்	NDT (தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா)	100	79	87	90	49
புடவை மற்றும் ஆடைத் தொழில்நுட்பம்	NDT (தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா)	60	60	60	60	53
மின், இலத்திரனியல், தொலைத்தொடர்புப் பொறியியல் தொழில்நுட்பம்	NDT (தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா)	200	EE – 101 ET – 100	EE – 100 ET – 100	EE – 100 ET – 100	105
இடைப் பாடவிதான கற்கைகள்	NDT (தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா)	794 *				0
தகவல் தொழில்நுட்பம்	NDT (தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா)	100	100	100	90	0
மொத்தம்		**800**				**397**

* பிரிவு, அனைத்து மாணாக்கர்களுக்கான நிகழ்ச்சித்திட்டங்களை முன்னெடுக்கின்றது.

<u>2023 ஆம் ஆண்டில் ஒவ்வொரு கற்கை ஆண்டில் மாணாக்கர்களின் எண்ணிக்கை</u>

கற்கைத் துறை	பாடநெறி	ஆட்சேர்ப்பு 2023	1 ஆம் ஆண்டு (1, 2 அரையாண்டு)	2 ஆம் ஆண்டு (3, 4 அரையாண்டு)	3 ஆம் ஆண்டு (5, 6 அரையாண்டு)	டிப்ளோமா தாரி மாணாக்கர்கள் 2023
மொத்தம்	NDT	800	764	769	771	*397

* அணியிலுள்ள மொத்த மாணாக்கர்களின் எண்ணிக்கை 480.

7.2 கல்விசார் மற்றும் கல்விசாரா பணியாட்குழுவின் விபரங்கள்

(2023.12.31)

பணியாட்குழு வகுதி	சம்பள அளவுத்திட்டம்	அனுமதித்த பதவியினர் எண்ணிக்கை	தற்போதுள்ள பதவியினர் எண்ணிக்கை	வெற்றிடங்கள்
கல்விசார் பணியாட்குழு	U-AC 3 to U-AC 5	79	57	22
	U-AC 1 to U-AC 2	50	42	8
நிறைவேற்றுநர் பணியாட்குழு	U-EX 1 to U-EX 3 (நிருவாக மற்றும் நிதி பணியாட்குழு)	7	7	0
	U-EX 1 to U-EX 3 (ஏனைய நிறைவேற்றுப் பணியாட்குழு)	1	0	1
மருத்துவ அதிகாரி	U-MO 1	1	0	1
கல்விசார் உதவி பணியாட்குழு	U-AS 1	7	2	5
	U-AS 2,2	3	2 (ஒப்பந்த)	1
தொழில்நுட்ப பணியாட்குழு	U- MT 1	40	24	16
எழுதுநர் மற்றும் அதனோடிணைந்த	U-MN 1	36	30	6
	U-MN 2,3	5	3	2
	U-MN 4	2	2	0
முதனிலை பணியாட்குழு	U-PL 1 to U-PL 3	84	58	26
மொத்தம்		315	227	88

08. ஆராய்ச்சிகளும் புத்தாக்கங்களும் வெளியீடுகளும் பற்றிய விபரங்கள்

மொறட்டுவைப் பல்கலைக்கழக தொழில்நுட்ப நிறுவகத்தின் பணியாட்குழுவினால் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகளின் காண்புகள், உள்நாட்டிலும் சருவதேச அளவிலும் சமர்ப்பிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன.

பதிப்பாசிரியர்கள்	ஆராய்ச்சித் தாளின் தலைப்பு	மாநாடு / ஜேர்னல் / நூல்கள்/ சேர்வுத் திகதி
நிலங்க ஹர்ஷனீ வீரசிங்க, பசிந்து கவிஷ்ணா சில்வா, வசுதா பிரபோதனீ அபேரத்ன, கயன்தி கிறிஷானி பெரேரா, ஜோன், ரங்கிக்கா உமேஷ் ஹல்வத்துர	Reducing CO_2 level in the indoor urban built environment: Analysing indoor plants under different light levels	க்ளீனர் பொறியியல் மற்றும் தொழில்நுட்பம் (Cleaner Engineering and Technology)
ஏ.எம்.எம்.ஜீ.முணசிங்க, ஆர்.யூ.ஹல்வத்துர, ஜீ.கே.பீ.ஜோன்	Development of a modular roof tile for sloped green roofs in the tropics	சிவில் பொறியில் ஆராய்ச்சிக் கருத்தரங்கு, மொறட்டுவைப் பல்கலைக்கழகம் - 2023
வசுதா அபேரத்ன, கயன்தி கிறிஷானி பெரேரா, ஜோன், ரொஹன்த ஜயசிங்க, ஆர்.வை.எஸ்.ஆரியரத்ன, மனுஜ பிரமோத்ய ஹென்தாவிதாரண, ரங்கிக்கா யூ. ஹல்வத்துர, அர்துரஸ் கக்லவுஸ்காஸ், எவ்.றிஸ்னா அரூஸ், ஏ.ஷெஹான் பெரேரா,	Integrated decision-making model to enhance the employee-oriented built environment in urban green buildings	கீயோஸ் (Qeios)

ஆராய்ச்சிகளும் புத்தாக்கங்களும் வெளியீடுகளும் பற்றிய விபரங்கள்

பதிப்பாசிரியர்கள்	ஆராய்ச்சித் தாளின் தலைப்பு	மாநாடு / ஜேர்னல் / நூல்கள்/ சேர்வுத் திகதி
ஏ.டப்ளியு.தெம்பிலியாகொட, பீ.கே.சி. த சில்வா, ரி.எம்.என்.விஜயரத்ன	Review on Impact of Sand Mining on Local Scour around Bridge Piers	பேண்தகு அபிவிருத்திக்கான சிவில் மற்றும் சூழல் பொறியியலாளர் பிரயோகங்களின் முன்னேற்றம் பற்றிய 9 ஆவது சருவதேச கருத்தரங்கு - திகதி: 2023.03.16
ஏ.டப்ளியு.தெம்பிலியாகொட, கே.சி. த சில்வா, ரி.எம்.என். விஜயரத்ன	Application of HEC-RAS 2D model to Simulate Scour Depth Around Bridge Piers: A Case Study on Kelansiri Bridge, Sri Lanka	2023 மொறட்டுவை பொறியியல் ஆராய்ச்சி மாநாடு (MERCon) - திகதி: 2023.11.10
மஞ்சுள விக்ரமதிலக, எம்.டி.பௌசி அப்துல்லாஹ், மொஹமட் யுஸ்ரி ஹஸன், ஹயாதி அப்துல்லாஹ்	Detection of occupancy status from internet connectivity for non-intrusive load monitoring	மின் பொறியியல் மற்றும் கணினியியல் பற்றிய இந்தோனேசிய சஞ்சிகை (தொகுதி 30, இல. 03, யூன் 2023) 2023.01.09 ஆம் திகதி ஏற்றுக்கொள்ளப்பட்டது.
கவ்டர் எம்.முஸ்தபா, அசுரா ஹம்ஸா, ஒய் வை கிங்க், அஹமட் ஹசிக் ஜமன் ரொசோல், நொரிலிஸா மொஹமட், மஹரூப் மொஹமட் மஹரூப், சுலைமான் வடி ஹருன்.	Synthesisation, Fabrication, and Incorporation Techniques of MAX Phase and MXene Saturable Absorber in Passively Q-switched and Mode-locked All-fibre Laser Cavities: A Review	பிரயோக விஞ்ஞானமும் பொறியியல் தொழில்நுட்பமும் பற்றிய உயர் ஆராய்ச்சிச் சஞ்சிகை
ஏ.டப்ளியு.சி.கே. அட்டுகொட, கே.எஸ்.டி.பிரனாந்து	Improved Particle Swarm Optimization for Optimizing The Deep Convolutional Neural Network	தகவல் தொழில்நுட்பவியல் ஆராய்ச்சி பற்றிய 8 ஆவது சருவதேச மாநாடு

ஆராய்ச்சிகளும் புத்தாக்கங்களும் வெளியீடுகளும் பற்றிய விபரங்கள்

பதிப்பாசிரியர்கள்	ஆராய்ச்சித்தாளின் தலைப்பு	மாநாடு / ஜேர்னல் / நூல்கள்/ சேர்வுத் திகதி
அபேசிங்க யூ., சமரமாது எஸ்., ஹேவாவசம் சி.	Influence of The Safety-Security Attributes on The Walkability of University Students in Sri Lanka	வாகனங்கள் மற்றும் லொஜிஸ்டிக் கைத்தொழிலுக்கான ஆராய்ச்சிகள் (R4TLI) - 2023 ஆகஸ்ட் 26
அபேசிங்க யூ., சமரமாது எஸ்., ஹேவாவசம் சி.	Effective Integration of Walkability-Enhancing Neighborhood Environment Attributes into Urban Transport Planning in Sri Lanka	ITUM-IIMS ஒருங்கிணைந்த சருவதேச ஆராய்ச்சி மாநாடு 2023 நவம்பர் 4 - 5
அபேசிங்க யூ., சமரமாது எஸ்., ஹேவாவசம் சி.	Influence of Neighborhood Environment Attributes on the Walkability of University Students	மொறட்டுவை பொறியியல் ஆராய்ச்சி மாநாடு 2023 (MERCon 2023) 2023 நவம்பர் 9 - 11
அபேசிங்க யூ., சமரமாது எஸ்., ஹேவாவசம் சி.	Review of Walkability Enhancing Neighborhood Environment Attributes in Urban Tropics	போக்குவரத்து ஆராய்ச்சிக் கூட்டவை, 2003 (TRF 2023) 2023 டிசம்பர் 8
எம்.ரி.ரி.ரி. த சில்வா, எஸ்.சி.மத்துகம, பிமலீ ஜயசிங்க	Modelling the Consumer Price and Producer Price Indices with Related Economic Variables	மொறட்டுவை பொறியியல் ஆராய்ச்சி மாநாடு 2023, 2023 நவம்பர் 9-11 வரை. மொறட்டுவைப் பல்கலைக்கழகம், இலங்கை
டப்ளியு.ஈ.இரோஷனீ, எஸ.சி.மத்துகம, ஜே.ஏ.பி.யூ.ஜயசிங்க	Analyzing the Behavior of Sri Lankan Inflation Rates using Time Series Analysis	11 ஆவது AIMS சருவதேச கருத்தரங்கு, 2023 நவம்பர் 4 - 5, மொறட்டுவைப் பல்கலைக்கழக தொழில்நுட்ப நிறுவகம், இலங்கை
- ITUM வளாகத்தின் சட்டரீதியான உரிமையைப் பெறுதல் சம்பந்தமாக நடவடிக்கைகளை மேற்கொள்ள நிறுவகத்தை வழிமுறைப்படுத்தல்.

3. 2023 ஆண்டினுள் நடாத்தப்பட்ட கணக்காய்வுக் கூட்டங்கள் பற்றிய விபரம்

அரச பொறுப்புமுயற்சிகள் திணைக்களத்தின் சுற்றறிக்கை இலக்கம் PED 55 மற்றும் PED 12 ஆகியவற்றின் மூலம் குறைந்தபட்சம் மூன்று மாதங்களுக்கொரு தடவையாவது கணக்காய்வுக் குழு கூட்டப்படல் வேண்டும். அதற்கிணங்க, மீளாய்வு ஆண்டினுள் ITUM இன் கணக்காய்வுக் குழு நான்கு தடவைகள் கூட்டப்பட்டுள்ளது.

57-வது கணக்காய்வு குழுக் கூட்டம்	2023 மார்ச், 3
58-வது கணக்காய்வு குழுக் கூட்டம்	2023 யூன், 23
59-வது கணக்காய்வு குழுக் கூட்டம்	2023 செப்ரெம்பர், 1
60-வது கணக்காய்வு குழுக் கூட்டம்	2023 நவம்பர், 24

4. 2023 ஆண்டுக்கான கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டம் மற்றும் செயற்பாட்டுத்திட்டம் ஆகியவற்றை அமுல்படுத்துதல்

முகாமைத்துவ கணக்காய்வுச் சுற்றறிக்கை இலக்கம் DMA/01-2019 (1) மூலம் தேவைக்கு ஏற்றவாறு கணக்காய்வு அத்தியட்சகரின் கருத்தையும் கவனத்தில் கொண்டு, உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் ஒவ்வொரு வருடமும் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டம் மற்றும் செயல்பாட்டுத்திட்டம் ஆகியன தயாரிக்கப்பட்டு, அங்கீகாரத்துக்காக அத் திட்டங்கள் கணக்காய்வு குழுவுக்கு சமர்ப்பிக்கப்படும். கணக்காய்வுக் குழு, திட்டங்களை விரிவான முறையில் மீளாய்வுக்கு உட்படுத்தப்படுவதுடன், தேவையான சந்தர்ப்பங்களில் மாற்றங்களை முன்மொழியும். 2023 ஆண்டுக்கான கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டம் மற்றும் செயல்பாட்டுத்திட்டம் ஆகியன 2022 திசம்பர் 2-ஆம் திகதி நடாத்தப்பட்ட 56-வது கணக்காய்வு குழுக் கூட்டத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு, அங்கீகரிக்கப்பட்டுள்ளது. 2022 ஆண்டுக்கான உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டத்தை பூர்த்திசெய்தல் சார் வீதம் 100% ஆகும்.

4.1 2023-இன் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டத்திற்கு ஏற்ப கணக்காய்வுகள் மேற்கொள்ளப்பட்ட பகுதிகள்:

4.1.1 முன் கணக்காய்வுகள்

- பல்கலைக்கழக சேமலாப நிதியினை (UPF) விடுவித்தல்.
- ஊழியர் பணிக்கொடை கொடுப்பனவை செலுத்துதல்.
- ஓய்வூதிய சம்பள நிதியை விடுவித்தல்.
- பிணை உத்தரவாதங்களை கணக்கிடுதல்.

4.1.2 கண்டுபிடிப்புக்கள் சார்பாக வெளியிடப்பட்ட கணக்காய்வு விசாரணைகள்

- பல்கலைக்கழக சேமலாப நிதியை விடுவிப்புச் செய்யும் செயற்பாடு.
- சம்பளங்களை செலுத்தும் செயற்பாடு.
- முற்பணம் செலுத்துதல் மற்றும் மீள அறவிடல்.
- குறுகிய கால பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்திற்கான நிதியை வழங்குதல்.
- கணக்கீட்டுப் பொதி (Package) மற்றும் நிலையான சொத்துக்கள் சார் பொதி (Package).
- மீண்டுவரும் செலவினம்.
- சிறாப்பரின் காசு (Shroff's Cash) மற்றும் சில்லறைக் காசு (Petty Cash) ஆகியவற்றை சரிபார்த்தல்.
- வங்கிக் கணக்கிணக்கக் கூற்று, காசேடு.

4.1.3 பிற கணக்காய்வு அலுவல்கள்

- கணக்காய்வு சார் பரிந்துரைகளை அமுலாக்குதல் பற்றிய அறிக்கை.
- 2020 மற்றும் 2021 ஆண்டுகளுக்கான பல்கலைக்கழக மற்றும் உயர் கல்வி நிறுவகங்களின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமையதிபதி-யினது அறிக்கையில் கூறப்பட்டுள்ள குறைபாடுகளை திருத்தியமைத்தல் பற்றிய அறிக்கை.

5. வெளிவாரி கணக்காய்வு

1978 ஆண்டின் 16-ம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 107(1) பிரிவின் படி, சகல உயர் கல்வி நிறுவனங்களின் கணக்கீடுகள் கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் கணக்காய்வு செய்யப்படல் வேண்டும். PED 12 இலக்கமுடைய பொது பொறுப்புமுயற்சிகள் சுற்றறிக்கைக்கு இணங்க, நிதியாண்டு முடிவடைந்து அறுபது நாட்களுக்குள் அதன் விரிவான கணக்கீட்டுத் தொகுப்பை தேசிய கணக்காய்வு அலுவலகத்திற்கு ஒப்படைக்கிறது. இதன்படி, ITUM மூலம் 2022 ஆண்டுக்கான கணக்கீட்டுத் தொகுப்பு 2024 பெப்பிரவரி 26-ஆம் திகதி கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

(கையொப்பம்)

பேராசி. கே.ரீ.எம்.யூ. ஹேமபால

தவிசாளர்

கணக்காய்வு குழு

2024.09.04

19. தேசிய கணக்காய்வு அலுவலகம்

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

எனது இல: HED/C/ITUM/6/2/23/FA **திகதி:** 2024, மே 22

பணிப்பாளர்,
தொழில்நுட்ப நிறுவகம் - மொறட்டுவைப் பல்கலைக்கழகம்

மொறட்டுவைப் பல்கலைக்கழக தொழில்நுட்ப நிறுவகத்தின் 2023 திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களும், பிற சட்ட மற்றும் ஒழுங்குறுத்துகைத் தேவைப்பாடுகளும் குறித்த 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவிற்கமைவான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மொறட்டுவைப் பல்கலைக்கழக தொழில்நுட்ப நிறுவகத்தின் 2023 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதிநிலைக்கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்ற, உரிமைமாற்றக் கூற்ற, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று, பொருண்மையான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு உரிய தகவல்களும் அடங்கிய நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களை உள்ளடக்கிய 2023 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள், 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 107(5) உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசினது அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரைக்கும், 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் அமைய எனது பணிப்பின்கீழ் கணக்காய்வுக்கு செய்யப்பட்டது.

எனது அறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை என்ற பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் எழுகின்ற பாதிப்பு தவிர, நிறுவகத்தின் நிதிக் கூற்றுக்களின் மூலம் 2023 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதிநிலை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயற்பாடு, காசுப்பாய்ச்சல்கள் என்பன இலங்கை அரசதுறை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைய உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையொன்றைப் பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

அ) 13 செலவு விடயங்களின் மதிப்பீட்டுக் கிரயத்தில் ரூ.3,621,257 தொகைக்கான மிகை ஏற்பாடு இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமம் 03 இன் 39 ஆம் பந்திக்கு முரணாக ஆண்டின் வருமானத்திற்கு சீராக்கம் செய்வதற்குப் பதிலாக பொது ஒதுக்குகள் கணக்கில் வரவினத்தில் பதிவுசெய்யப்பட்டிருந்தது.

ஆ) ரூ.205,322,908 பெறுமதியான முதலீட்டு ஆதனத்தை மதிப்பீடு செய்யும் அடிப்படை இலங்கை அரசதுறை கணக்கீட்டு நியமம் 13 இன்படி நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதுடன், அந்த முதலீட்டு ஆதனங்களுக்குரிய சொத்து வகையீடொன்று நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

இ) தொழில்நுட்ப நிறுவகம் வசமுள்ள பல்நோக்குக் கட்டிடத்தினதும் பொறிமுறைப் பொறியியல் தொழில்நுட்பத் திணைக்களத்தினதும் பராமரிப்புச் செலவினம் சார்பாக மேற்கொள்ளப்பட்ட ரூ.485,000 தொகையை செலவினமாக பதிவழிப்பதற்குப் பதிவதற்குப் பதிலாக மூலதனமாக்கப்பட்டிருந்தது.

ஈ) இரண்டு வங்கிக் கணக்குகளுக்கு உரிய 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான மொத்தம் ரூ.53,000,000 தொகைக்கான அழைப்பு முதலீடுகள் காசேட்டு மீதியிலிருந்து குறைத்துக் காட்டப்பட்டிருந்ததன் காரணமாக காசேட்டின்படி ரூ.18,320,420 எதிர்மறை மீதியொன்று காணப்பட்டபோதும், நிதிநிலைக் கூற்றில் அந்த மீதிகளின் மொத்தம் ரூ.34,679,580 ஆகக் காட்டப்பட்டிருந்தது.

உ) 2021, 2022 ஆகிய ஆண்டுகளுக்குரியதாக ஒதுக்கப்பட்ட செலுத்தப்பட வேண்டிய கணக்காய்வுக் கட்டணங்கள் ரூ.1,406,4000 ஆண்டின் செலவுகளாக கணக்குகளில் பதியப்பட்டிருந்ததன் காரணமாக மீளாய்வு ஆண்டின் பற்றாக்குறை அந்த அளவினால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. அதேபோல், அவ்வாண்டுகளுக்காக மீண்டும் ரூ.1,406,400 ஒதுக்கீடு செய்து பொது ஒதுக்குகள் கணக்கில் சீராக்கம் செய்யப்பட்டிருந்தது.

ஊ) முன்னைய ஆண்டில் கிடைத்தற்பாலனவற்றின் கணக்குகளில் பதியப்பட்டிருந்த மீளாய்வு ஆண்டில் கிடைத்திருந்த ரூ.7,939,011 தொகை ஆண்டின் வருமானத்துடன் சேர்க்கப்பட்டிருந்ததன் காரணமாக மீளாய்வு ஆண்டின் பற்றாக்குறை அந்த அளவினால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. அதேபோல், கிடைத்தற்பாலனவற்றின் கணக்கில் அந்த நிலுவை பொது ஒதுக்குக் கணக்கிலிருந்து குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

எ) கடைத்தொகுதி வருமானத்தில் ரூ.4,421,623 தொகை ஆண்டின் வருமானமாக கணக்குகளில் பதியப்படாமல் நிறுவகத்தின் நிதியங்களுக்கு நேரடியாக வரவுவைக்கப்பட்டதன் காரணமாக, ஆண்டின் பிற வருமானங்கள் அந்த அளவினால் குறைவாக கணக்குகளில் பதியப்பட்டிருந்தது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) அமைய என்னால் கணக்காய்வு செய்யப்பட்டது. இக்கணக்காய்வு நியமனங்களின் கீழான எனது பொறுப்புடைமை, இவ்வறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புடைமை என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையொன்றை வழங்குவதற்கு என்னால் பெறப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் பொருண்மையானவையும் பொருத்தமானவையுமாகும் என்பது எனது நம்பிக்கையாகும்.

1.3 நிறுவகத்தின் 2023 ஆண்டறிக்கையில் அடங்கியுள்ள ஏனைய தகவல்கள்

இக்கணக்காய்வு அறிக்கைத் திகதிக்கு முன்னர் என்னால் பெறப்பட்ட, நிறுவகத்தின் 2023 ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளபோதும் நிதிக்கூற்றுக்களிலும் அவை பற்றிய எனது கணக்காய்வு அறிக்கையில் அடங்கியிராத தகவல்கள், ஏனைய தகவல்கள் என்பதால் கருதப்படும். இந்த ஏனைய தகவல்களுக்கு முகாமைத்துவம் பொறுப்புக் கூற வேண்டும்.

நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமான எனது அபிப்பிராயத்தின் மூலம் ஏனைய தகவல்கள் உள்ளடக்கப்படவில்லை என்பதோடு, அது சம்பந்தமாக உறுதிப்படுத்தல் எதனையும் அல்லது அபிப்பிராயம் எதனையும் நான் வெளிப்படுத்தவில்லை.

மேலே அடையாளம் காணப்பட்ட ஏனைய தகவல்களை வாசித்தல் மற்றும் அவ்வாறு செய்யும்போது ஏனைய தகவல்கள் நிதிக்கூற்றுக்களுடன் அல்லது கணக்காய்வின்போது அல்லது வேறு வகையில் பெற்றுக் கொண்ட எனது அறிவிற்கமைய பொருண்மையான விதத்தில் பொருந்தவில்லையா என்பதைப் பரிசீலிப்பதே நிதிக்கூற்றுக்கள் பற்றிய எனது கணக்காய்வு தொடர்பில் எனது பொறுப்பாகும்.

இக்கணக்காய்வு அறிக்கைத் திகதிக்கு முன்னர் நான் பெற்றுக்கொண்ட ஏனைய தகவல்களின் அடிப்படையிலும், என்னால் செய்யப்பட்ட கருமங்களின் அடிப்படையிலும், இந்த ஏனைய தகவல்கள் பொருண்மையான விதத்தில் தவறாகக் காட்டப்பட்டுள்ளதாக நான் முடிபு செய்வேனாயின், அவ்விடயத்தை நான் அறிக்கையிடுவது அவசியமாகும். இது தொடர்பில் எனக்கு அறிக்கையிடுவதற்கு எதுவுமில்லை.

1.4 நிதிக் கூற்றுக்கள் பற்றிய முகாமைத்துவத்தினதும் கட்டுப்பாட்டுத் தரப்பினரதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை அரசதுறை கணக்கீட்டு நியமங்களுக்கமைய தயாரித்தலும், நியாயமான விதத்தில் சமர்ப்பித்தலும், மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் அற்றவையாக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை இயலச்செய்யும் வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தலும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும்போது, நிறுவகத்தை தொடர்ந்து நடாத்திச்செல்லும் ஆற்றலைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் ஒரு பொறுப்பாகும் என்பதுடன், முகாமைத்துவம் நிறுவகத்தை ஒழிவுக்கு உட்படுத்தக் கருதுமாயின் அல்லது வேறு மாற்று நடவடிக்கையொன்று இல்லாதவிடத்து செயற்பாடுகளை முடக்க நடவடிக்கை எடுக்குமாயின் ஒழிய, தொடர்ந்து இயங்குவதன் அடிப்படையில் கணக்குவைத்தலும், நிறுவகம் தொடர்ந்தும் இயங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் ஒரு பொறுப்பாகும்.

நிறுவகத்தின் நிதிசார் அறிக்கையிடல் செயன்முறை சம்பந்தமாக பரிசோதிக்கும் பொறுப்பு, கட்டுப்பாட்டுத் திறத்தவர்களைச் சாரும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவிற்கமைய, நிறுவகத்தின் ஆண்டுக்குரிய மற்றும் பருவ நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை இயலச்செய்யும் விதத்தில் தமது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பற்றி உரிய முறையில் ஏடுகளும் அறிக்கைகளும் பேணி வரப்படுதல் வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்பு

முழுதுமளாவியதாக நிதிக்கூற்றுக்கள், மோசடிகளும் தவறுகளும் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்படுத்தலொன்றை வழங்குவதும், எனது அபிப்பிராயம் அடங்கிய கணக்காய்வு அறிக்கையை வெளியிடுவதும் எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல், உயர்மட்ட உறுதிப்படுத்தலொன்றாக இருக்கின்றபோதும், இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கமைய கணக்காய்வை மேற்கொள்ளும்போது அது எப்பொழுதும் பொருண்மையான பிறழ்கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றாக அமையாது. மோசடிகளும் தவறுகளும் தனியாக அல்லது கூட்டாக பாதிப்பதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படலாமென்பதுடன், இந்நிதிக்கூற்றுக்களின் அடிப்படையில் பயனர்களினால் எடுக்கப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீதான பாதிப்பின் மீது அதன் பொருண்மை தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கமைய கணக்காய்வின் ஒரு பகுதியாக உயர்தொழில்சார் நியாயப்படுத்தலுடனும் உயர்தொழில்சார் ஐயுறவுடனும் என்னால் செயலாற்றப்பட்டது. என்னால் மேலும் -

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வகுத்துக் கொள்ளும்போது மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய, பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படும் ஆபத்துக்களை அடையாளம் காண்பதற்கும் மதிப்பீடுசெய்வதற்கும் வேளைக்கேற்றவாறு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிட்டு அமுல்படுத்தப்பட்டன. தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களின் மூலம் ஏற்படக்கூடிய பாதிப்பை விட மோசடியொன்றினால் ஏற்படக்கூடிய பாதிப்பு வன்மையானது என்பதுடன் சூழ்ச்சிசெய்தல், போலி ஆவணங்களைப் புனைதல், திட்டமிட்ட திரித்துக் காட்டுதல் அல்லது உள்ளக கட்டுப்பாடுகளைத் தவறவிடுதல் மோசடியொன்று இடம்பெறுவதற்குக் காரணமாக அமையும்.
- உள்ளக கட்டுப்பாட்டின் பயன்கூர்தன்மை பற்றிய அபிப்பிராயமொன்றைத் தெரிவிக்கும் எண்ணத்துடன் இல்லாதபோதும், வேளைக்கேற்றவாறு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாடு சம்பந்தமான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடு, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தினால் செய்யப்பட்ட சம்பந்தப்பட்ட வெளிப்படுத்தல்கள் மதிப்பிடப்பட்டது.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து இயங்குதல் பற்றிய பொருண்மையான நிச்சமற்ற தன்மையொன்று காணப்படுகின்றதா என்பது சம்பந்தமாக பெற்றுக்கொண்ட கணக்காய்வுச் சான்றுகளின் அடிப்படையில் கணக்கீட்டுக்காக நிறுவகத்தின் தொடர்ந்து இயங்குதல் பற்றிய அடிப்படையைப் பயன்படுத்தும் ஏற்புடைமை தீர்மானிக்கப்பட்டது. போதிய நிச்சயமற்ற தன்மையொன்று காணப்படுவதாக நான் முடிவு செய்வேனாயின், நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய வெளிப்படுத்தல்கள் போதுமானதாக இல்லாதவிடத்து, எனது அபிப்பிராயம் திருத்தப்படுதல் வேண்டும். இருப்பினும், எதிர்கால நிகழ்வுகளின் அல்லது நிலைமைகளின் அடிப்படையில் தொடர்ந்து இயங்குதல் ஒழிவுறலாம்.

நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புக்கும் உள்ளடக்கத்துக்கும் அடிப்படையாக அமைந்த கொடுக்கல்வாங்கல்களும் நிகழ்வுகளும் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியிருக்கின்றமையும், வெளிப்படுத்தல்கள் அடங்கிய நிதிக்கூற்றுக்களின் முழுதுமளாவிய சமர்ப்பிப்பும் மதிப்பிடப்பட்டது.

எனது கணக்காய்வின்போது இனமறியப்பட்ட முக்கிய கணக்காய்வுக் காண்புகளும், பிரதான உள்ளக கட்டுப்பாட்டுப் பலவீனங்களும் ஏனைய விடயங்களும் குறித்து கட்டுப்பாட்டுத் திறத்தவர்களை அறிவுறுத்துகின்றேன்.

2. பிற சட்ட மற்றும் ஒழுங்குறுத்துகைத் தேவைப்பாடுகள் குறித்த அறிக்கை

2.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பில் விசேட ஏற்பாடுகள் உள்ளடங்குகின்றன.

2.1.1 எனது அறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை என்ற பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் எழும் பாதிப்பு தவிர, 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(அ) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின்படி கணக்காய்வுக்குத் தேவையான அனைத்துத் தகவல்களும் விளக்கங்களும் என்னால் பெறப்பட்டதுடன், எனது விசாரணையின் மூலம் தோன்றுகின்றவாறு உரிய நிதி அறிக்கைகள் நிறுவகத்தினால் பேணிவரப்பட்டிருந்தன.

2.1.2 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின்படி நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்கள் கடந்த ஆண்டுகளுடன் ஒத்திசைகின்றன.

2.1.3 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(i)(ஈ)(iv) ஆம் பந்தியில் குறிப்பிடப்படும் தேவைப்பாடுகளின்படி கடந்த ஆண்டில் என்னால் செய்யப்பட்ட சிபார்சுகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

2.2 பின்பற்றப்பட்ட செயன்முறைகளும் பெறப்பட்ட சான்றுகளும் மீதும் பொருண்மையான விடயங்களுக்கான மட்டுப்பாட்டினுள்ளும் பின்வரும் கூற்றுக்களைத் தெரிவிக்குமளவுக்கு எதுவும் எனது கவனத்திற்கு உட்படவில்லை.

2.2.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(ஈ) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டிற்கு அமைய நிறுவகத்தின் முகாமைச் சபை அங்கத்தவர் ஒருவருக்கு நிறுவகம் தொடர்பில் குறித்தவோர் ஒப்பந்தம் சம்பந்தமாக நேரடியாக அல்லது வேறு வகையில் பொதுவான வியாபார நிலைமைக்கு அப்பால் தொடர்பொன்று உள்ளமை.

2.2.2 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(ஊ) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டுக்கமைய பின்வரும் அவதானிப்புகள் தவிர்ந்த ஏதேனும் தொடர்புடைய எழுத்திலான ஒரு சட்டத்துக்கு அல்லது நிறுவகத்தின் முகாமைச் சபையினால் விடுக்கப்பட்ட வேறு பொதுவான அல்லது விசேட பணிப்புகளுடன் ஒத்திசையாத விதத்தில் செயலாற்றப்பட்டுள்ளமை.

	சட்டதிட்டங்கள்/ பணிப்புடனான தொடர்பு	அவதானிப்புகள்
(அ)	2021 நவம்பர் மாதம் 16 ஆந் திகதிய, 01/2021 ஆம் இலக்க பொது தொழில்முயற்சிகள் சுற்றறிக்கையின் செயற்பாட்டுக் கைந்நூலின் பந்தி 6.6	ஒரு கணக்காண்டு முடிவடைந்து 05 மாதங்களுக்குள் ஆண்டறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்றபோதும், 2022 ஆம் ஆண்டுக்குரிய ஆண்டறிக்கை 2024 மார்ச் மாதம் 31 ஆம் திகதியளவிலும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.
(i)	பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர்கல்வி நிறுவகங்களுக்கான தாபன விதிக்கோவையின் அத்தியாயம் IX பிரிவு 3.1	சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுக்கு முரணாக கல்விசார் பணியாட்குழுவின் உள்வருகையையும் வெளிச் செல்லலையும் உறுதிப்படுத்திக் கொள்ளாமல் மீளாய்வு ஆண்டில் திசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை ரூ.209,826,653 தொகை சம்பளங்களாகவும் படிகளாகவும் செலுத்தப்பட்டிருந்தது.

2.2.3 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(எ) ஆம் பிரிவில் குறிப்பிடப்படும் தேவைப்பாட்டிற்கமைய அதிகாரங்களுக்கும் கடமைகளுக்கும் பணிகளுக்கும் ஒத்திசையாத விதத்தில் செயலாற்றப்பட்டுள்ளமை.

2.2.4 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(ஏ) ஆம் பிரிவில் குறிப்பிடப்படும் தேவைப்பாட்டிற்கமைய நிறுவகத்தின் வளங்களை சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் பயன்கூர் விதத்திலும் காலவரையறைகளினுள் ஏற்புடைய சட்டதிட்டங்களுக்கு அமைய பெறுகைசெய்து பயன்படுத்தியிருக்காமை.

2.3 வேறு விடயங்கள்

(அ) தொழில்நுட்ப நிறுவகத்தை வேறிடத்தில் மீளநிறுவுதல் மற்றும் அபிவிருத்திக் கருத்திட்டத்தின் கீழ் 2017 ஆம் ஆண்டில் ரூ.8,821,053,785 செலவிட்டு கட்டிடங்களை அமைத்து நிறுவகம் ஆரம்பிக்கப்பட்டிருந்தபோதும், அக்காணியின் சட்டரீதியான உரித்து 2024 ஏப்ரல் அளவிலும் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கிரயம் ரூ.8,821,053,785 பெறுமதியான கட்டிடங்களுக்குள் இருந்த 26 விடுதி அறைகள் வீதமுள்ள இரண்டு மாடிகளின் அறைகளின் நிர்மாணமும் ஒதுக்குதலும் அத்தகைய கட்டிடத்தொகுதியின் 02 விடுதிக் கட்டிடங்களின் கூரைகள் அமைப்பதை விடுத்து, மரத்தளபாடங்களையும் உபகரணங்களையும வழங்குவதை விடுத்து பொறுப்பேற்கும் சான்றிதழை விநியோகித்து 2017 ஆம் ஆண்டில் நிறுவகத்தின் பணிப்பாளரினால் கட்டிடங்கள் பொறுப்பேற்கப்பட்டிருந்தன. 2017 ஆம் ஆண்டு முதல் 2024 ஏப்ரல் வரையான நிர்மாணிப்புகள் முழுமையடையாத கட்டிடங்களின் கூரைகள் நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லையாதலால், நீண்டகாலம் முதல் காலநிலை மாற்றங்களை எதிர்நோக்கியதன் காரணமாக கட்டிடங்களின் ஏனைய கட்டமைப்புசார்ந்த பகுதிகளுக்கும் சேதங்கள் ஏற்படும் தீவிர ஆபத்துநிலை நிலவியது.

(இ) உரிய சாத்தியவள ஆய்வொன்று இன்றி 2014 ஆம் ஆண்டில் தொழில்நுட்ப நிறுவகத்தின் கிரயம் ரூ.205,322,908 கொண்ட 13 கடைகளை உள்ளடக்கிய கடைத்தொகுதியொன்றும் விருந்தினர் இல்லமொன்றும் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. அதில் 05 கடைகளும் விருந்தினர் இல்லமும் வருமானம் ஈட்டாத நிலையில் காணப்பட்டது. வருமானம் இன்றி பராமரிப்புச் செலவுகளை மாத்திரம் கொண்ட இக்கட்டிடத்தொகுதியின் நிர்மாணிப்புக் கிரயம் பொருளாதார ரீதியில் பயனுறுதியானதாக இருக்கவில்லை.

(ஈ) 02 வருடங்களுக்குக் கூடுதலான காலமாக கொடுப்பனவின்றிய நிலையிலுள்ள மாணவர் உதவி மற்றும் மகாபொல மீதிகள் முறையே ரூ.3,029,900, ரூ.453,650 ஆக இருந்தது.

(உ) கல்விசார் விடுமுறை பெற்று வெளிநாடு சென்ற இரண்டு ஆசிரியர்களின் ஒப்பந்தங்கள் மற்றும் முறிகளை மீறுதலின் பேரில் 2023 திசெம்பர் 31 இலுள்ளவாறு ரூ.12,571,822 அறவிடப்பட வேண்டியிருந்தது.

(ஊ) 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 01 வருடத்திற்கும் 02 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலத்திற்கு உரிய சேர்ந்த பெறுமதி ரூ.5,725,853 தொகையும், 02 வருடங்களுக்கும் கூடுதலான காலமாக காணப்படும் சேர்ந்த பெறுமதி ரூ.4,612,584 கடன்கொர்டுநர் மீதிகளையும் செலுத்தித் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) மீளாய்வு ஆண்டில் இறுதிக்கு வேறு 05 நிதியங்களின் திரண்ட பெறுமதி ரூ.19,753,388 தொகை 01 ஆண்டு முதல் 12 ஆண்டுகள் வரையான காலம் செயற்பாடற்ற நிலையில் காணப்பட்டதுடன், மீளாய்வு ஆண்டில் ரூ.4,352,305 தொகை கிடைத்திருந்தது. மொத்தம் ரூ.25,190,592 கொண்ட 9 நிதியங்களும பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஒப்பம்)
டப்ளியு.பீ.சி.விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

20. கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கைக்கானபதில்

<u>மொறட்டுவைப் பல்கலைக்கழக தொழில்நுட்ப நிறுவகத்தின் 2023 திசெம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்களும் பிற சட்ட மற்றும் ஒழுங்குறுத்துகைத் தேவைப்பாடுகளும் பற்றிய 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவிற்கு அமைவான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கு பதிலளித்தல்</u>

கணக்காய்வு அபிப்பிராயம்		விளக்கங்கள் ∴ எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்	
		1.1	**முனைப்பழியுள்ள அபிப்பிராயம**
		1.2	**அபிப்பிராயத்திற்கான அடிப்படை**
(அ)	13 செலவு விடயங்களின் மதிப்பீட்டுக் கிரயத்தில் ரூ.3,621,257 தொகைக்கான மிகை ஏற்பாடு இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமம் 03 இன் 39 ஆம் பந்திக்கு முரணாக ஆண்டின் வருமானத்திற்கு சீராக்கம் செய்வதற்குப் பதிலாக பொது ஒதுக்குகள் கணக்கில் வரவினத்தில் பதிவுசெய்யப்பட்டிருந்தது.	**(அ)**	தங்களினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ள ரூ.3,621,257 பெறுமதியானது அட்டுறு செலவுகள் தொடர்பாக செய்யப்பட்ட மிகை மதிப்பீடாகும். இந்த அட்டுறு செலவுகள், 2022 ஆம் ஆண்டின் கணக்குகளிலிருந்து அடையாளம் காணப்பட்ட செலவுகளாக இருப்பதுடன், இவ்வாறு முன்னைய ஆண்டுகள் தொடர்பில் சீராக்கங்கள் செய்யப்பட்டுள்ளன.
(ஆ)	ரூ.205,322,908 பெறுமதியான முதலீட்டு ஆதனத்தை மதிப்பீடு செய்யும் அடிப்படை இலங்கை அரசதுறை கணக்கீட்டு நியமம் 13 இன்படி நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதுடன், அந்த முதலீட்டு ஆதனங்களுக்குரிய சொத்து வகையீடொன்று நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	**(ஆ)**	தங்களினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ள முதலீட்டு ஆதனங்களுக்குரிய பெறுமதி, ***அட்டவணை E*** (Schedule – E) இறுதிக் கணக்குகளின் பக்கம் இல. 29 இல் காட்டப்பட்டுள்ளது.
(இ)	தொழில்நுட்ப நிறுவகம் வசமுள்ள பல்நோக்குக் கட்டிடத்தினதும் பொறிமுறைப் பொறியியல் தொழில்நுட்பத் திணைக்களத்தினதும் பராமரிப்புச் செலவினம் சார்பாக மேற்கொள்ளப்பட்ட ரூ.485,000 தொகையை செலவினமாக பதிவழிப்பதற்குப் பதிவதற்குப் பதிலாக மூலதனமாக்கப்பட்டிருந்தது.	**(இ)**	தங்களினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ள பல்நோக்குக் கட்டிடங்களினதும் பொறிமுறைப் பொறியியல் பிரிவினதும் சேதமடைந்த 03 கண்ணாடிகளுக்காக கொடுப்பனவுகள், கட்டிட புனரமைப்புச் செலவுகளின் கீழ் காட்டப்பட்டுள்ளன. இருப்பினும், அதில் கணக்கீட்டு வழுவொன்று காணப்படுமாயின், அவ்வழுவை 2024 ஆம் ஆண்டின் கணக்குகளுடன் சீராக்கம் செய்து சமர்ப்பிப்பதற்கு குறித்துக்கொள்ளப்பட்டது.

கணக்காய்வு அபிப்பிராயம்		விளக்கங்கள் ∴ எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்	
		1.1	**முனைப்பழியுள்ள அபிப்பிராயம**
		1.2	**அபிப்பிராயத்திற்கான அடிப்படை**
(ஈ)	இரண்டு வங்கிக் கணக்குகளுக்கு உரிய 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான மொத்தம் ரூ.53,000,000 தொகைக்கான அழைப்பு முதலீடுகள் காசேட்டு மீதியிலிருந்து குறைத்துக் காட்டப்பட்டிருந்ததன் காரணமாக காசேட்டின்படி ரூ.18,320,420 எதிர்மறை மீதியொன்று காணப்பட்டபோதும், நிதிநிலைக் கூற்றில் அந்த மீதிகளின் மொத்தம் ரூ.34,679,580 ஆகக் காட்டப்பட்டிருந்தது.	**(ஈ)**	தங்களினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ள 308280, 83062337 ஆகிய கணக்குகளுக்கு உரிய திருத்திய காசு நிலுவை எதிர்மறைப் பெறுமதிகளைக் கொண்டதாக உள்ளது. பொதுத் திறைசேரியில் இராக்கால வைப்புகளில் (overnight deposits) பணம் முதலீடு செய்யப்படுவதே அதற்குரிய காரணமாகும். இந்த எதிர்மறையான பெறுமானங்களை கணக்குகளில் காண்பிப்பது பொருத்தமற்றதென்பதால், இவ்வாறு குறுகிய கால முதலீடுகளில் காட்டுவதற்குப் பதிலாக உரிய நிலுவைகள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. எவ்வாறாயினும், 2024 சனவரி மாதம் முதல் சரியான பண நிலுவைகளைப் பதிவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.
(உ)	2021, 2022 ஆகிய ஆண்டுகளுக்குரியதாக ஒதுக்கப்பட்ட செலுத்தப்பட வேண்டிய கணக்காய்வுக் கட்டணங்கள் ரூ.1,406,4000 ஆண்டின் செலவுகளாக கணக்குகளில் பதியப்பட்டிருந்ததன் காரணமாக மீளாய்வு ஆண்டின் பற்றாக்குறை அந்த அளவினால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. அதேபோல், அவ்வாண்டுகளுக்காக மீண்டும் ரூ.1,406,400 ஒதுக்கீடு செய்து பொது ஒதுக்குகள் கணக்கில் சீராக்கம் செய்யப்பட்டிருந்தது.	**(உ)**	தங்களினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ள 2021, 2022 ஆம் ஆண்டுகளுக்கு உரிய ஒதுக்கீடு செய்யப்பட்ட கணக்காய்வுக் கட்டணங்கள் தொடர்பான சீராக்கங்களை 2024 ஆம் ஆண்டின் கணக்குகளுடன் சமர்ப்பிப்பதற்கு குறித்துக்கொள்ளப்பட்டது.
(ஊ)	முன்னைய ஆண்டில் கிடைத்தற்பாலனவற்றின் கணக்குகளில் பதியப்பட்டிருந்த மீளாய்வு ஆண்டில் கிடைத்திருந்த ரூ.7,939,011 தொகை ஆண்டின் வருமானத்துடன் சேர்க்கப்பட்டிருந்ததன் காரணமாக மீளாய்வு ஆண்டின் பற்றாக்குறை அந்த அளவினால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. அதேபோல், கிடைத்தற்பாலனவற்றின் கணக்கில் அந்த நிலுவை பொது ஒதுக்குக் கணக்கிலிருந்து குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.	**(ஊ)**	தங்களினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ள முன்னைய ஆண்டுகளின் கிடைக்க வேண்டிய வருமானங்களையும், நடப்பாண்டில் கிடைத்த வருமானங்களையும் அடையாளம் கண்டு அதன்படி கணக்குகளில் பதிவதற்கு குறித்துக்கொள்ளப்பட்டது.

கணக்காய்வு அபிப்பிராயம்		விளக்கங்கள் ∴ எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்	
		1.1	**முனைப்பழியுள்ள அபிப்பிராயம**
		1.2	**அபிப்பிராயத்திற்கான அடிப்படை**
(எ)	கடைத்தொகுதி வருமானத்தில் ரூ.4,421,623 தொகை ஆண்டின் வருமானமாக கணக்குகளில் பதியப்படாமல் நிறுவகத்தின் நிதியங்களுக்கு நேரடியாக வரவுவைக்கப்பட்டதன் காரணமாக, ஆண்டின் பிற வருமானங்கள் அந்த அளவினால் குறைவாக கணக்குகளில் பதியப்பட்டிருந்தது.	**(எ)**	கடைத்தொகுதியிலிருந்து கிடைக்கும் வருமானத்தில் தொழில்நுட்ப நிறுவக அபிவிருத்தி நிதியம், நலன்புரி நிதியம், பல்நோக்கு அபிவிருத்தி நிதியம், பணிப்பாளர் நிதியம் ஆகிய நான்கு(4) நிதியங்களுக்கு உரிய சதவீதங்களின் செலவு வைத்தல், 2019 ஆகஸ்ட் மாதம் 20 ஆம் திகதிய 03 ஆவது நிதிக் குழுவின் சிபார்சு மற்றும் 2019 ஆகஸ்ட் மாதம் 22 ஆம் திகதிய 221 ஆவது முகாமைச் சபையின் அனுமதி ஆகியவற்றின் பேரில் மேற்கொள்ளப்படுகிறது.

கணக்காய்வு அபிப்பிராயம்			விளக்கங்கள் ∴ எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்	
			2	<u>**பிற சட்ட மற்றும் ஒழுங்குறுத்துகைத் தேவைப்பாடுகள் பற்றிய அறிக்கை**</u>
			2.2.2	
(அ)	2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(ஊ) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டுக்கமைய பின்வரும் அவதானிப்புகள் தவிர்ந்த ஏதேனும் தொடர்புடைய எழுத்திலான ஒரு சட்டத்துக்கு அல்லது நிறுவகத்தின் முகாமைச் சபையினால் விடுக்கப்பட்ட வேறு பொதுவான அல்லது விசேட பணிப்புகளுடன் ஒத்திசையாத விதத்தில் செயலாற்றப்பட்டுள்ளமை.		**(அ)**	2022 ஆம் ஆண்டுக்கு உரிய ஆண்டறிக்கை, 2023.03.16 ஆம் திகதி நடைபெற்ற முகாமைச் சபையினால் அனுமதிக்கப்பட்டுள்ளது. அதன் மென் பிரதியொன்று 2023.03.29 ஆம் திகதி கல்வி அமைச்சுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. அது தொடர்பாக மேலதிக ஆலோசனை வழங்கிய அமைச்சுக் கடிதமொன்று 2023.05.10 ஆம் திகதி கிடைக்கப்பெற்றுள்ளது. அதன்படி, செயலாற்றி குறித்த அறிக்கை பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. மேற்குறித்த அறிக்கை, 2024.02.16 ஆம் திகதி அமைச்சரவை அங்கீகாரத்துக்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. அதனை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பது பொருத்தமானதென 2024.02.26 ஆம் திகதிய அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளது. அவ்வாறு அதனை ஒப்படைக்க வேண்டிய திகதி பாராளுமன்றத்தினால் அறிவிக்கப்படும். அதுவரை அவ்வறிக்கை தயாரிக்கப்பட்டு வருகின்றதென்பதை அறிவிக்க விரும்புகின்றேன்.
	<u>**சட்டதிட்டங்கள்/ பணிப்புடனான தொடர்பு**</u>	<u>**அவதானிப்புகள்**</u>		
	2021 நவம்பர் மாதம் 16 ஆந் திகதிய, 01/2021 ஆம் இலக்க பொது தொழில்முயற்சிகள் சுற்றறிக்கையின் செயற்பாட்டுக் கைந்நூலின் பந்தி 6.6	ஒரு கணக்காண்டு முடிவடைந்து 05 மாதங்களுக்குள் ஆண்டறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்றபோதும், 2022 ஆம் ஆண்டுக்குரிய ஆண்டறிக்கை 2024 மார்ச் மாதம் 31 ஆம் திகதியளவிலும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.		
(ஆ)	பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர்கல்வி நிறுவகங்களுக்கான தாபன விதிக்கோவையின் அத்தியாயம் IX பிரிவு 3.1	சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுக்கு முரணாக கல்விசார் பணியாட்குழுவின் உள்வருகையையும் வெளிச் செல்லலையும் உறுதிப்படுத்திக் கொள்ளாமல் மீளாய்வு ஆண்டில் திசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை ரூ.209,826,653 தொகை சம்பளங்களாகவும் படிகளாகவும் செலுத்தப்பட்டிருந்தது.	**(ஆ)**	இங்கு காட்டப்பட்டுள்ள பணிப்புகள் அவ்வாறிருப்பினும், பல்கலைக்கழக முறைமையில் எந்தவொரு நிறுவனத்தின் உள்வருதல் அல்லது வெளிச்செல்லல் என்பன கற்கைப் பணியாட்டொகுதியினால் பதியப்படுவதில்லை. நிறுவனத்திற்கு இணைக்கப்பட்டுள்ள மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தில் அவ்வாறு இடம்பெறாத காரணத்தால் நிறுவனத்தினுள்ளும் குறித்த இசைவை முன்னெடுத்துச் செல்ல முடியாதுள்ளது.

கணக்காய்வு அபிப்பிராயம்		விளக்கங்கள் ∴ எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்	
		2.3	**பிற விடயங்கள்**
(அ)	தொழில்நுட்ப நிறுவகத்தை வேறிடத்தில் மீளநிறுவுதல் மற்றும் அபிவிருத்திக் கருத்திட்டத்தின் கீழ் 2017 ஆம் ஆண்டில் ரூ.8,821,053,785 செலவிட்டு கட்டிடங்களை அமைத்து நிறுவகம் ஆரம்பிக்கப்பட்டிருந்தபோதும், அக்காணியின் சட்டரீதியான உரித்து 2024 ஏப்ரல் அளவிலும் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	**(அ)**	தற்போது தொழில்நுட்ப நிறுவகத்திற்கு சொந்தமான காணி, 2005 ஆம் ஆண்டில் வானொலி ஒலிபரப்புநிலையமொன்றை அமைப்பதற்காக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்கு கையகப்படுத்தப்பட்டுள்ளது. எனினும், அவ்வாறு கையகப்படுத்தப்பட்டுள்ள விடயம் நிறைவேறியிருக்கவில்லை என்பதால், அக்காணியை மீண்டும் அரசாங்கத்திற்கு உரிமைமாற்றம் செய்யப்பட்டிருப்பதாக ஹோமாகம பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். எனினும், அவர்களினால் கையகப்படுத்தும் எல்லைகளை அமைச்சரவை அங்கீகாரத்தின் பேரில் நீக்கிக்கொண்டு அக்காணி மீண்டும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்கு உரிமைமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தெரிவிக்கின்றது. இதன்படி, காணியின் சட்டரீதியான உரித்து பற்றிய பிரச்சினையொன்று எழுந்துள்ளது. பிரதேச செயலாளர் தொழில்நுட்ப நிறுவகத்துடன் 25 மில்லியன் ரூபா பண ரீதியான கொடுக்கல்வாங்கலொன்றும் இடம்பெற்றிருப்பதால், காணியை உரிமைமாற்றம் செய்யும் நடவடிக்கைகள் குறித்து காணி ஆணையாளர் நாயகத்திடம் ஆலோசனை கோரியுள்ளார். இருப்பினும், இச்செயற்பாட்டை தொடர்ந்தும் மேற்கொள்ள எம்மால் 2023.10.23 ஆம் திகதி காணி ஆணையாளர் அபிவிருத்திப் பிரிவுடன் கலந்தாலோசித்து காணியை உரிமைமாற்றம் செய்வதற்கு உரிய அனைத்து விபரங்களையும் பெற்றுக்கொடுத்த போதிலும், மரபுரிமை நிழ்ச்சித்திட்டத்துடன் அவர்களுக்கு வேலைப்பளு அதிகமானமையால், ஒரு நாளைக் குறித்துக் கூறவில்லை. தற்போது காணி ஆணையாளருடன் கலந்துரையாடுவதற்கு 2024.08.22 ஆம் திகதி நாள்குறித்து வழங்கப்பட்டுள்ளது. அன்றைய தினம் அக்கலந்துரையாடலில் கலந்துகொண்டு காணியை உரிமைமாற்றம் செய்யும் நடவடிக்கைகள் குறித்த ஆலோசனைகள் பெற்றுக்கொள்ளப்படவுள்ளது.

கணக்காய்வு அபிப்பிராயம்		விளக்கங்கள் ∴ எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்	
		2.3	**<u>பிற விடயங்கள்</u>**
(ஆ)	கிரயம் ரூ.8,821,053,785 பெறுமதியான கட்டிடங்களுக்குள் இருந்த 26 விடுதி அறைகள் வீதமுள்ள இரண்டு மாடிகளின் அறைகளின் நிர்மாணமும் ஒதுக்குதலும் அத்தகைய கட்டிடத்தொகுதியின் 02 விடுதிக் கட்டிடங்களின் கூரைகள் அமைப்பதை விடுத்து, மரத்தளபாடங்களையும் உபகரணங்களையும வழங்குவதை விடுத்து பொறுப்பேற்கும் சான்றிதழை விநியோகித்து 2017 ஆம் ஆண்டில் நிறுவகத்தின் பணிப்பாளரினால் கட்டிடங்கள் பொறுப்பேற்கப்பட்டிருந்தன. 2017 ஆம் ஆண்டு முதல் 2024 ஏப்ரல் வரையான நிர்மாணிப்புகள் முழுமையடையாத கட்டிடங்களின் கூரைகள் நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லையாதலால், நீண்டகாலம் முதல் காலனிலை மாற்றங்களை எதிர்நோக்கியதன் காரணமாக கட்டிடங்களின் ஏனைய கட்டமைப்புசார்ந்த பகுதிகளுக்கும் சேதங்கள் ஏற்படும் தீவிர ஆபத்துநிலை நிலவியது.	**(ஆ)**	குறித்த விடுதித் தொகுதி, உயர்கல்வி அமைச்சின் கீழ் இயங்கிய கருத்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்டதாகும். இங்கு, தொழில்நுட்ப நிறுவகம் உரிய கருத்திட்டத்தின் பயனாளி மாத்திரம் என்பதுடன், அத்தரப்பின் முக்கிய தரப்பொன்றாக செயலாற்றியிருக்கவில்லை. முழுமை அடையாத கட்டுமானங்களைப் பூர்த்திசெய்வதற்கு நிதி ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்படாதுள்ள ஒரு நிலைமையின் கீழ் அந்தக் கட்டுமானங்களை பூர்த்திசெய்வதற்கு ஆற்றல் இல்லாமலுள்ளது. எவ்வாறாயினும், இந்த முழுமை அடையாத கட்டுமானம் தொடர்பில் உயர்கல்வி அமைச்சு அடிக்கடி அறிவுறுத்தப்பட்டுள்ளதுடன், தொழில்நுட்ப நிறுவகம் என்ற வகையில் இது சம்பந்தமான விடயங்களைப் பரிசீலித்து முகாமைச் சபைக்கு அறிக்கையிடுவதற்கு குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. இக்குழுவியின் அவதானிப்புகள் தற்போது முகாமைச் சபைக்கு வழங்கப்பட்டுள்ளது. முகாமைக் குழு, அவ்வறிக்கை குறித்து தற்போது ஆராய்ந்து வருகிறது.

கணக்காய்வு அபிப்பிராயம்		விளக்கங்கள் ∴ எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்	
		2.3	<u>**பிற விடயங்கள்**</u>
(இ)	உரிய சாத்தியவள ஆய்வொன்று இன்றி 2014 ஆம் ஆண்டில் தொழில்நுட்ப நிறுவகத்தின் கிரயம் ரூ.205,322,908 கொண்ட 13 கடைகளை உள்ளடக்கிய கடைத்தொகுதியொன்றும் விருந்தினர் இல்லமொன்றும் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. அதில் 05 கடைகளும் விருந்தினர் இல்லமும் வருமானம் ஈட்டாத நிலையில் காணப்பட்டது. வருமானம் இன்றி பராமரிப்புச் செலவுகளை மாத்திரம் கொண்ட இக்கட்டிடத்தொகுதியின் நிர்மாணிப்புக் கிரயம் பொருளாதார ரீதியில் பயனுறுதியானதாக இருக்கவில்லை.	**(இ)**	கடந்த ஆண்டுகளில் கடைத் தொகுதியில் கடைகளை குத்தகை விடுவதற்கு பின்வருமாறு கேள்வி விலை கோரப்பட்டது. 2022.02.27, 2022.06.18, 2022.09.11, 2023.02.17, 2023.11.08 எனினும், போதுமான வகையில் கேள்விப் பத்திரங்கள் கடைத்தொகுதிகளுக்கு கிடைக்கவில்லை. வியாபாரங்களை ஆரம்பிக்கும் ஒப்பந்தக்காரர்களும் குறுகிய ஒரு காலப்பகுதியில் வியாபாரங்கள் களைகட்டவில்லையென்று அறிவித்துவிட்டு சாவிகளை ஒப்படைத்திருந்தனர். இது சம்பந்தமாக பல்வேறு பிரச்சார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டபோதும், தேவையான இலக்குகளை அடைந்துகொள்ள முடியாமைக்கு இன்னும் இவ்வாறான பாரிய கடைத்தொகுதியொன்றின் தேவை தியகம பிரதேசவாசிகளுக்கு இல்லாமல் இருப்பது காரணமாக இருக்கலாம். மேலும், மிக அதிக செலவில் அமைக்கப்பட்டிருந்த விருந்தினர் இல்லத்திற்கும் எதிர்பார்க்கப்பட்ட அளவு வருமானம் கிடைப்பதில்லை. அதற்கு அவசியமான பிரச்சார நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டபோதும், அவை வெற்றிபெறவில்லை. விருந்தினர் இல்லமொன்று/ஹோட்டலொன்று இலாபமடைவதற்கெனில், அது நிறுவப்பட்டுள்ள பிரதேசம் மிக முக்கியமானதாகும். விருந்தினர் இல்லமொன்றுக்கு வரும் அளவுக்கு தியகம சூழலில் பார்வையிடுவதற்கேனும் எதுவுமில்லை. மேலும், தற்போதைய சொகுசு பண்டங்கள், காற்றுச்சீராக்கி வசதி முதலியவற்றைக் கருத்திற்கொண்டு இதற்கு அறவிடப்படும் கட்டணங்கள் கணிப்பிடப்பட்டுள்ளபோதும், அவை பிரதேசத்தின் சிறிய ஹோட்டல்களிலுள்ள விலைகளுடன் (உணவு, ஊழியர்கள் உட்பட) ஒப்பிடும் போது வாடிக்கையாளருக்கு வாய்ப்பானதாக இல்லை. மேலைத்தேய நாடுகளிலுள்ள பல்கலைக்கழக கிராமங்களை முன்மாதிரியாகக் கொண்டு அமைக்கப்பட்ட கட்டிட கருத்துருக்கள் எந்தளவுக்கு நிறுவகத்திற்கு பொருளாதார ரீதியாக பயனுறுதிவாய்ந்ததாக உள்ளது என்பது சிக்கலானதாகும். இச்சிக்கல்களை நிவர்த்திசெய்வதும் இவ்வாறான ஒரு நிலைமையின் பேரில் இவற்றிலிருந்து வருமானம் ஈட்டுவதும் நிருவாகத்தின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட ஒரு

			விடயம் என்பதை அறிவிக்கின்றேன். மேலும், கேள்விப்பத்திர நடைமுறையின் அடிப்படையில் கடைகளை வழங்கும் முறைமையின் தோல்விநிலை அடையாளம் காணப்பட்ட அரச கணக்காய்வுப் பிரிவினால் கேள்வி கோராமல் முறைசார்ந்த ஒரு திட்டத்தின் கீழ் கடைகளை வழங்குவதற்குரிய ஆலோசனை வழங்கப்பட்டது. அதன்படி, தற்போது 4 கடைகளை அரசாங்க விலைமதிப்பீட்டு வாடகைத் தொகைக்கு மேற்பட்ட விலைக்கு வழங்குவதற்கு அவசியமான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. எவ்வாறாயினும், 12 அறைகளில் 4 அறைகள் மேலும் வருமானம் பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் இருப்பதுடன், தற்போது அதற்கான பிரச்சார வேலைத்திட்டம் அமுல்படுத்தப்பட்டு வருகிறது.
(ஈ)	02 வருடங்களுக்குக் கூடுதலான காலமாக கொடுப்பனவின்றிய நிலையிலுள்ள மாணவர் உதவி மற்றும் மகாபொல மீதிகள் முறையே ரூ.3,029,900, ரூ.453,650 ஆக இருந்தது.	(ஈ)	தங்களினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ள 02 வருடங்களுக்கு கூடுதலான கொடுப்பனவு மேற்கொள்ளப்படாத மாணவர் உதவித் தொகைகளை 2024 ஆம் ஆண்டில் இணக்கப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு செலுத்தப்பட வேண்டிய மகாபொல முற்பணத் தொகைகளுக்கு உரிய கடிதத்தை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு அனுப்புவதற்கு குறித்துக்கொள்ளப்பட்டது.
(உ)	கல்விசார் விடுமுறை பெற்று வெளிநாடு சென்ற இரண்டு ஆசிரியர்களின் ஒப்பந்தங்கள் மற்றும் முறிகளை மீறுதலின் பேரில் 2023 திசெம்பர் 31 இலுள்ளவாறு ரூ.12,571,822 அறவிடப்பட வேண்டியிருந்தது.	(உ)	உரிய முறித் தொகைகளைச் செலுத்துமாறு அறிவித்து குறித்த விரிவுரையாளர்களுக்கு தனிவேறான கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. அதற்கான சட்டரீதியான நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு தயாராக இருப்பதுடன், ரூ.11,942,064.55 பெறுமதியான முறித் தொகையொன்று செலுத்தப்பட வேண்டிய விரிவுரையாளர் (பெண்) அவரை மீள சேவைக்கு இணைத்துக் கொள்ளுமாறு கோரிக்கை முன்வைத்துள்ளார். உரிய காலப்பகுதியில் பாடநெறி பூர்த்திசெய்யப்பட்டிருப்பின், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கைப்படி செயலாற்றப்பட அல்லது நீதிமுறை நடவடிக்கைகளுக்கு அமைய செயலாற்றப்பட உள்ளது.

கணக்காய்வு அபிப்பிராயம்		விளக்கங்கள் ∴ எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்	
		2.3	**<u>பிற விடயங்கள்</u>**
(ஊ)	2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 01 வருடத்திற்கும் 02 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலத்திற்கு உரிய சேர்ந்த பெறுமதி ரூ.5,725,853 தொகையும், 02 வருடங்களுக்கும் கூடுதலான காலமாக காணப்படும் சேர்ந்த பெறுமதி ரூ.4,612,584 கடன்கொர்டுநர் மீதிகளையும் செலுத்தித் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	**(ஊ)**	தங்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ள கால இடைவெளி 1-2 வருடங்களுக்கு இடைப்பட்ட மற்றும் 2 வருடங்களுக்கு மேற்பட்ட கடன்கொடுநர் நிலுவைகளை விடுவித்தல் சம்பந்தமாக 2024 ஆம் ஆண்டில் இயன்றளவுக்கு செயலாற்ற குறித்துக்கொள்ளப்பட்டது.
(எ)	மீளாய்வு ஆண்டில் இறுதிக்கு வேறு 05 நிதியங்களின் திரண்ட பெறுமதி ரூ.19,753,388 தொகை 01 ஆண்டு முதல் 12 ஆண்டுகள் வரையான காலம் செயற்பாடற்ற நிலையில் காணப்பட்டதுடன், மீளாய்வு ஆண்டில் ரூ.4,352,305 தொகை கிடைத்திருந்தது. மொத்தம் ரூ.25,190,592 கொண்ட 9 நிதியங்களும பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.	**(எ)**	தங்களினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ள நிதிப் பெறுமானம் ரூ.19,753,388.00 தொகையைப் பயன்படுத்தி புலமைப்பரிசில் வழங்குவதற்கானது என்றபோதிலும், அதற்கான விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறவில்லை.